# தமிழரசு

1.12.1996 ரூ.3














# இந்த இதழில்...


★ பொங்கல் முதல் வறுமை ஒழிப்பதற்கான புதிய திட்டம்
-முதல்வர் கலைஞர் ..... 2

★ பாரதி உள்ளம்
-புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ..... 5

★ செய்திச் சரம் ..... 6

★ காவல்துறை போக்குவரத்துப் பிரிவினருக்கு நவீன கருவிகள் ..... 8

★ இதய நோய்
- டாக்டர் என். அர்த்தநாரி ..... 11

★ கூட்டுறவுத் துறையின் சாதனை மணக்கும் பணிகள் ..... 17

★ கோடு தாண்டிய கோதை
- அன்னம் ..... 19

★ அயோடின் உப்பு ..... 26

★ கம்பனும் பாரதியும்
- டாக்டர் சாரதா நம்பி ஆரூரன் ..... 28

★ வேலைவாய்ப்பு அலுவலகத்தில் விடுபட்டுப்போன பதிவைப் புதுப்பிக்க அரசாணை ..... 37

★ அரசு உதவிகளைப் பெற யாரை அணுக வேண்டும்? ..... 39

★ பாவம், பசுந்தளிர்கள் ..... 43



## தமிழரசு

திருவள்ளுவராண்டு: 2027
கார்த்திகைத் திங்கள் : 16
மலர்: 27 இதழ்: 11
1.12.1996 விலை: ரூ. 3



# பொங்கல் முதல் வறுமை ஒழிப்பதற்கான அரசின் புதிய திட்டம்

**- முதல்வர் கலைஞர்**

"1996-ஆம் ஆண்டு உணவுப் பாது காப்புக் கண்காட்சி தொடக்க விழாவில் நானும் பங்கு பெறுவதில் மிகுந்த மகிழ்ச்சி யடைகின்றேன். இந்தக் கண்காட்சியை அமைப்பதற்கான முயற்சிகளை மேற் கொண்டதற்காக சென்னை கிழக்கு ரோட்டரி கிளப்பை நான் பாராட்டுகிறேன். ரோம் நகரில் உணவு மாநாடு நடைபெறுவதற்குச் சில நாட்கள் முன்பாக இந்தக் கண்காட்சி நடை பெறுகிறது.

உணவுப் பாதுகாப்பு குறித்த எந்த ஒரு கருத்தரங்கமும் அல்லது விவாதமும் நம் நாட்டில் பசுமைப் புரட்சியை உருவாக்கிய நமது மரியாதைக்குரிய சி.சுப்பிரமணியம் அவர்களும், வேளாண்மை மற்றும் உற் பத்திக்கு, ஆற்றிய பங்கு காரணமாக அனை வராலும் அறியப்பட்டவரும் அதில் உலகம் முழுவதும் அங்கீகாரம் பெற்றவருமான டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களும் இல்லாமல் முழுமை அடையாது. அவர்கள் இருவருமே இப்போது சென்னையில் உள்ளனர். அதை நாங்கள் முழு அளவில் பயன்படுத்திக் கொள்வோம் என்று உறுதி யளிக்கிறேன்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 47-வது பிரிவு, மாநிலம் தனது மக்களின் சத்துணவின் அளவையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்து வதில் அக்கரை செலுத்தி, பொதுச் சுகா தாரத்தை மேம்படுத்துவது அதன் அடிப் படைப் பணிகளில் அடங்கியதாகும் என்று குறிப்பிட்டிருப்பதை நினைவூட்டு வதற்கு இது சரியான சந்தர்ப்பமாகும். எல்லோருக்கும் உணவு வழங்குவதில் தமிழ்நாடு முன்னணி யில் உள்ளது. தமிழக அரசு பல ஆண்டு களுக்கு முன்பே சத்துணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. அது சர்வதேச தரத் துடன் கூடிய சிறப்பான திட்டம் என்று பாராட்டப்பட்டது.

"தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்று மகாகவிபாரதி கூறினார்: அரசின் மிக முக் கியக் கடமை எழுத்தறிவின்மையையும் பசியையும் அகற்றுவதேயாகும். மகாகவி பாரதியாரின் சொற்களை எதிரொலிக்கும் வகையில் மகாத்மா காந்தியடிகளும் "சுதந்திர இந்தியாவின் முதல் கடமை ஒவ்வொரு தனி மனிதருக்கும் அன்றாட உணவை வழங்குவதாகும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

நாம் இப்போது உணவுப் பாதுகாப்பு என்று கூறுவது எது என்றால் பல ஆண்டுகளுக்கு முன்பே மகாகவி பாரதி கூறியதுதான்!

ஒரு சமுதாயம் உணவில் "பாதுகாப்புடன்" உள்ளது என்று கூற முடியுமானால் அதில் உள்ள எல்லோருக்கும் ஆற்றலோடும் ஆரோக்கியத்துடன் வாழும் அளவுக்கு, போதுமான அளவுக்கு உணவு கிடைத்தால் தான் கூற முடியும். இதற்கான வழி உடலுழைப்பாகவும், பொருளாதாரமாகவும்

அல்லது இரண்டுமாகவும் இருக்கலாம். உடலுழைப்பு ரீதியான வழியை உணவை தொடர்ந்து வழங்குவதன் மூலம் உறுதிப் படுத்த முடியும். பொருளாதார ரீதியான வழி மக்களுடைய வாங்கும் சக்தியை அதிகரிக்கச் செய்வதன் மூலம் மட்டுமே உறுதி செய்ய முடியும்.

இவைகளில் ஏதேனும் ஒன்று இல்லாமலோ, குறைவாகவோ இருந்தால் அதன் விளைவு உணவில் பாதுகாப்பற்ற நிலை ஏற்படும். பசிக்கு முக்கியக் காரணம் வறுமை, வருவாயைப் பெருக்கும் பல்வேறு திட்டங்களை அமல்படுத்துவதன் மூலம் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களின் சதவிகிதம் குறைந்து வருகிறது என்ற சிந்தனையால் நாம் ஓரளவு ஆறுதல் அடைய முடியும் என்றாலும், நம் நாட்டில் உள்ள கோடிக் கணக்கான மக்கள் இன்று கூட ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவுகூட பெற முடியாமல் இருக்கிறார்கள், என்பது மிகுந்த வேதனைக்குரிய செய்தி. உணவுப் பாதுகாப்பின்மையைப் போக்குவதற்கான ஒரு வழி ஏழைகளுக்குப் பணத்தை ரொக்கமாகக் கொடுக்க வேண்டும் அல்லது உண்மையான வருவாய் உயரும் வகையில் அவர்கள் மீது கருணை காட்ட வேண்டும். அத்துடன் அவர்கள் உணவைப் பயன்படுத்தும் நிலையை அதிகரித்துக் கொள்வதற்கான வழிகளைக் காட்ட வேண்டும். வருவாயை அளிப்பதற்கு எல்லோரும் அறிந்த ஒரு வழி பொது விநியோக முறை மூலம் சந்தை விலைகளை விட குறைவான விலைக்கு உணவுப் பொருட்களை வழங்குவதாகும்.

வறுமையை எதிர்க்க நாங்கள் முயற்சிக்கும் மற்றொரு முக்கியமான திட்டம் மதிய சத்துணவுத் திட்டமாகும். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல இத்திட்டத்தை அமல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. இதன்மூலம் நேரடியாகப் பயன் பெறுகிறவர்களின் எண்ணிக்கை 79 இலட்சத்தை விட அதிகமாகும். இவர்களில்



**காலம்**

**கா**லம் மாறக் கூடியது; மாறிக் கொண்டே தான் இருக்கும். காலத்திற்கேற்ப கருத்தில் மாற்றம் வேண்டும்; அப்படி மாறாத சமுதாயம் மறைந்து விடும்.

**-பேரறிஞர் அண்ணா**

குழந்தைகள், மாணவர்கள், முதியோர், உதவித்தொகை பெறுவோர், கர்ப்பிணிப் பெண்கள், கைவிடப்பட்டோர் ஆகிய ஆதரவு தேவைப்படுவோர் அடங்குவர். மதிய உணவுத் திட்டத்திற்கு அனுமதி அளிக்கப் பட்ட நிதி **1995-96**-ஆம் ஆண்டு ரூ.360 கோடி இருந்தது. அது நடப்பு ஆண்டில் ரூ.401 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

**1996-97**-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் வறுமையால் ஏற்படும் பசியை ஒழிப்பதற்கான புதிய திட்டம் ஒன்றை அரசு அறிவித்தது. அத்துடன் இத்திட்டத்தை வகுத்துச்செயல்படுத்துவது குறித்து அரசுக்கு அறிவுரை கூற டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் தலைமையில் குழு ஒன்றையும் அரசு அமைந்துள்ளது. இந்தப் புதிய திட்டம் பொங்கல் பண்டிகையை ஒட்டி தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டம் கீரப்பாளையம், தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம், திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டம், வேடசந்தூர், தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர், இராமநாதபுரம் மாவட்டம் திருப்புலன், கன்னியாகுமரி மாவட்டம் கருத்தங்கோடு, நீலகிரி மாவட்டம் கோத்தகிரி ஆகிய 7 வட்டங்களில் (தாலுகா) தொடங்கப்படும். ஒவ்வொரு மாவட்டமும் வேறுபட்ட வேளாண்மை தட்பவெப்ப மண்டலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாட்டின் புதிய திட்டத்தின் அடிப்படையில் அகில இந்திய

**மனிதன் எவ்வளவுக்கெவ்வளவு பகுத்தறிவில் தெளிவு பெறுகிறானோ, அவ்வளவுக்கவ்வளவு பக்குவமானவன் என்பதுபொருள்.**

**– தந்தை பெரியார்**



அளவில் வறுமையற்ற பகுதி ஒன்றை 9வது ஐந்தாண்டுத் திட்டத்தில் அறிமுகப்படுத்து வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி பிரதமர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். அத்தகைய திட்டத்தை அமல்படுத்துவதற்கு எந்தெந்த வழிகளில் உதவி செய்யமுடியுமோ, அந்தந்த வழிகளில் உதவி செய்ய நாங்கள் மகிழ்ச்சி யுடன் முன்வருவோம். இத்தாலியில் நடைபெறவிருக்கும் உலக உணவு மாநாடு ஒவ்வொரு தனிநபருக்கும் உணவை வழங்கு வதற்கான வழிகளையும், முறைகளையும் ஆராய்வதற்காக நடைபெறுவதால் அம் மாநாட்டில் எங்கள் திட்டத்தை விவாதிக்க வேண்டும் என்றும் நமது அன்பிற்குரிய பிரதமரை நான் கேட்டுக் கொள்கிறேன். எந்தவொரு குழந்தையும், பெண்ணும், மனிதனும் உணவு இல்லாமல் நோய்வாய்ப் படக்கூடாது என்பதை உறுதி செய்வதே எங்கள் முயற்சியாகும்.

தமிழ்நாட்டில் பல ஆண்டுகளுக்குப் பிறகு உள்ளாட்சித் தேர்தல்கள் நடந்து முடிந் துள்ளன. நம் மக்களின் எதிர்பார்ப்புகள் அதிகரித்துள்ளன. நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களின் உணவுப் பாதுகாப்பை அளிப்பதில் நாம் வெற்றி பெறாவிட்டால் இந்த மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் என்ற முறையில் எங்கள் கடமையிலிருந்து தவறியவர்கள் ஆவோம். இந்த இனிய வேளையில் நாம் ஒருங் கிணைந்து இந்நாட்டில் உள்ள ஒவ்வொரு வருக்கும் உணவுப் பாதுகாப்பளிக்கும் பணியில் நம்மை அர்ப்பணித்துக் கொள் வோம்.

*(உணவுப் பாதுகாப்புக் கண்காட்சி விழாவினை மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. தேவகவுடா அவர்கள் 9.11.96 அன்று சென்னையில் துவக்கி வைத்தார். அவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்களது உரையினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி அவர்கள் படித்தார். அந்த உரையிலிருந்து...)*

## 1997ஆம் ஆண்டு அரசு விடுமுறை நாட்கள்

1997ஆம் ஆண்டுக்கான அரசு மற்றும் பொது விடுமுறை நாட்கள் விவரம்:

| | | |
|---|---|---|
| **1.1.1997** | புதன் | ஆங்கிலப் புத்தாண்டு |
| **14.1.1997** | செவ்வாய் | பொங்கல் திருநாள் |
| **15.1.1997** | புதன் | திருவள்ளுவர் தினம் |
| **16.1.1997** | வியாழன் | உழவர் திருநாள் |
| **26.1.1997** | ஞாயிறு | குடியரசு தினம் |
| **9.2.1997** | ஞாயிறு | ரம்ஜான் |
| **28.3.1997** | வெள்ளி | புனித வெள்ளி |
| **1.4.1997** | செவ்வாய் | வங்கி ஆண்டுக் கணக்கு முடிவு |
| **8.4.1997** | செவ்வாய் | தெலுங்குப் புத்தாண்டு |
| **14.4.1997** | திங்கள் | தமிழ்ப் புத்தாண்டு |
| **18.4.1997** | வெள்ளி | பக்ரித் |
| **1.5.1997** | வியாழன் | மே நாள் |
| **18.5.1997** | ஞாயிறு | முகரம் |
| **18.7.1997** | வெள்ளி | மிலாது நபி |
| **15.8.1997** | வெள்ளி | சுதந்திர தினம் |
| **25.8.1997** | திங்கள் | கிருஷ்ண ஜெயந்தி |
| **5.9.1997** | வெள்ளி | விநாயக சதுர்த்தி |
| **30.9.1997** | செவ்வாய் | வங்கி அரை ஆண்டுக் கணக்கு முடிவு |
| **2.10.1997** | வியாழன் | காந்தி ஜெயந்தி |
| **10.10.1997** | வெள்ளி | ஆயுத பூசை |
| **11.10.1997** | சனி | விஜயதசமி |
| **30.10.1997** | வியாழன் | தீபாவளி |
| **25.12.1997** | வியாழன் | கிறிஸ்துமஸ் |

# பாரதி உள்ளம்

**புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்**

சாதி ஒழித்திடல் ஒன்று - நல்ல
தமிழ் வளர்த்தல் மற்றொன்று
பாதியை நாடு மறந்தால் - மற்ற
பாதி துலங்குவ தில்லை!
சாதி கலைந்திட்ட ஏரி - நல்ல
தண்டமிழ் நீரினை ஏற்கும்
சாதிப் பிணிப்பற்ற தோளே - நல்ல
தண்டமிழ் வாளினைத் தூக்கும்!

என்றுரைப் பார் என்னிடத்தில் - அந்த
இன்ப உரைகளென் காதில்
இன்றும் மறைந்திட வில்லை - நான்
இன்னும் இருப்பத னாலே!
பன்னும் நம் பாரதியாரின் - நல்ல
பச்சைஅன் புள்ளத்தி னின்று
நன்று பிறந்தஇப் பேச்சு - நம்
நற்றமிழர்க் கெழில் மூச்சு!

மேலவர் கீழவர் இல்லை - இதை
மேலுக்குச் சொல்லிட வில்லை!
நாலு தெருக்களின் கூட்டில் - மக்கள்
நாலா யிரத்தவர் காணத்
தோலினில் தாழ்ந்தவர் என்று - சொல்லும்
தோழர் சமைத்ததை உண்பார்!

மேலும் அப்பாரதி சொல்வார் - "சாதி
வேரைப் பொசுக்குங்கள்" என்றே!

செந்தமிழ் நாட்டினிற் பற்றும் - அதன்
சீருக்கு நல்லதோர் தொண்டும்
நிந்தை இல்லாதவை அன்றோ! - எந்த
நேரமும் பாரதி நெஞ்சம்
கந்தையை எண்ணுவ தில்லை - கையிற்
காசை நினைப்பதும் இல்லை!
செந்தமிழ் வாழிய! வாழி - நல்ல
செந்தமிழ் நாடென்று வாழ்ந்தார்!

**- டிசம்பர் 11, மகாகவி பாரதியார் பிறந்த நாள்**



# செய்திச் சரம்

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களும், தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் திரு ஜி.கே. மூப்பனார் அவர்களும், மாண்புமிகு மத்தியத் தொழில் துறை அமைச்சர் திரு முரசொலி மாறன் அவர்களும், 21.11.96 அன்று, புதுடில்லியில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு தேவ கௌடாவைச் சந்தித்தனர்.

காவிரி நடுவர் மன்றத்திற்கு இரு வாரத்திற்குள் நடுவர் நியமிக்கப்படுவார் என்று அப்போது பிரதமர் அவர்கள் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு மத்திய அரசின் 10வது நிதிக்குழு ரூ.28.22 கோடி நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது.

இத்தொகையில், பேரூராட்சிகளுக்கு ரூ.10.67 கோடியும், நகராட்சிகளுக்கு ரூ.8.73 கோடியும், மாநகராட்சிகளுக்கு ரூ.8.82 கோடியும் ஒதுக்குமாறு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்.

டில்லி நகர வீதிகளில் இனி எச்சில் துப்பினாலும், குப்பைகளைப் போட்டாலும் அபராதம் செலுத்தவேண்டும். இதைக் கண்காணித்துத் தண்டிக்க, நடமாடும் முனிசிபல் நீதிபதிகள் நியமிக்கப்படவிருக்கின்றனர்.

மீனவர்களுக்காக 1996-97ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட 4,000 வீடுகளும் இந்த நிதியாண்டிற்குள் கட்டி முடிக்கப்படும்.

இயந்திரங்கள், வலைகள் வழங்குதல், மீனவர் காப்புறுதித் திட்டம், நீர்த்தேக்கங்களில் மீன் பிடிப்பு, விற்பனை ஆகிய திட்டங்களை விரைந்து செயல்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திருமதி ஜெனிபர் சந்திரன் தெரிவித்தார்.

தமிழகத்தில் 100 மாஜிஸ்திரேட்டுகள் நியமிக்கப்படவிருக்கின்றனர். இவர்களில் 30 பேர் பெண்களாவர்.

பி.எல். பட்டம் பெற்று வழக்கறிஞர் பணிபுரிந்திடும் 38 வயதிற்கு உட்பட்டோர் டிசம்பர் 12ஆம் தேதிக்குள் இதற்காக விண்ணப்பிக்கலாம் என்று தமிழ்நாடு தேர்வாணையக் குழு அறிவித்திருக்கிறது!

சென்னை, உதகமண்டலம், கடலூர், கோயம்புத்தூர், நாகர் கோயில், திருத்தணி ஆகிய இடங்களில் நீதிமன்றக் கட்டடங் களும், நீதித்துறை அலுவலர் களுக்குக் குடியிருப்பு கட்டவும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ரூ.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை இட்டுள்ளார்.

நீதிமன்றங்களில் கூடுதல் பணியிடங்களை ஏற்படுத்துதல், மரச்சாமான்கள் வாங்குதல், புதிய கட்டடங்கள் கட்டுதல் போன்றவற்றுக்காக மொத்தம் ரூ.21.25 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கிறது.

முதன் முதலாக ரியோடி ஜெனிரோவில் சுற்றுச்சூழல் பற்றிய உலகளாவிய மாநாடு 1992ல் நடைபெற்றது. அடுத்த மாநாடு 1998ல் நம் இந்தியத் திருநாட்டில் நடைபெறவிருக் கிறது. 155 உறுப்பு நாடுகள் கலந்துகொள்ளும் மாநாடாக இது இருக்கும்.

வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஏழை விதவைத் தாய்மார் களின் குழந்தைகளுக்குப் பாட நூல்களும் குறிப்பேடுகளும் இலவசமாக வழங்கும் திட்டத் தின் கீழ், ரூ.35 முதல் ரூ.190 வரை படிக்கும் வகுப்பிற்கேற்ப வழங்கப்பட்டு வந்தது.

இதை ரூ.50 முதல் ரூ.600 வரை உயர்த்தி வழங்கலாம் என தமிழ்நாடு அரசு ஆணையிட்டு இருக்கிறது. இதற்காக அரசு ரூ.4.65 இலட்சம் அளித்துள்ளது.

தமிழ்நாடு திருக்கோயில் களில், 150 புலவர்களை நிய மித்துத் தேவாரம், திருப்புகழ் வகுப்புகள் நடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாண்புமிகு இந்து அறநிலையத் துறை அமைச்சர் திரு புலவர் செங்குட்டுவன் கூறியுள்ளார்.

சென்னை அருகில் உள்ள செம்பரம்பாக்கம் திருமழிசை பகுதியில், 1,500 ஏக்கர் நிலப் பரப்பில் துணை நகரம் 'சாட்டிலைட் டவுன்' அமைக்கப் படும்.

இதன்மூலம், சுமார் ஒன்றரை இலட்சம் மக்களுக்கு வீட்டுவசதி அளிக்க முடியும். இத்திட்டத்தின் மொத்தப் பரப்பில் 5 சதவிகிதம் தொழில் நிலையங்கள் அமைக்க ஒதுக்கீடு செய்யப்படும். இப் பகுதியில் விவசாயம் செய்து வருவோர்க்கு மாற்று வேலை வாய்ப்புக்கான வழிவகை செய்யப் படும் என்று மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு கு. பிச்சாண்டி அறிவித்திருக்கிறார்.

சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவன வெள்ளி விழா நிறைவு நாள் விழா, 23.11.96 அன்று சென்னையில் நடைபெற்றது.

இதில் மேதகு இந்தியக் குடியரசின் துணைத் தலைவர் திரு கே.ஆர். நாராயணன் அவர்கள் கலந்து கொண்டார். இவ் விழாவிற்குத் தலைமை தாங்கிய மாண்புமிகுதமிழகக்கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் பேசுகையில் "ஐந்தாண்டுகளில், தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் தரமான கல்வி" வழங்கப்படும்' என்று குறிப் பிட்டார்.

# காவல்துறை போக்குவரத்துப் பிரிவினருக்கு ரூ.6.57 கோடியில் ஜீப்புகள், வயர்லெஸ் நவீன கருவிகள்! மாண்புமிகு முதல்வர் கலைஞர் வழங்கினார்



தமிழகத்திற்கு நகர்ப்புறங்களில் ஏற்படும் விபத்துக்களைத் தடுக்கும் வகையில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், வேலூர், ஈரோடு, திருப்பூர், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய பத்து பெருநகரங்களில் போக்குவரத்துத் திட்டங்கள் மற்றும் போக்குவரத்து ஒழுங்குப்படுத்தும் ஏற்பாடுகளுக்காகவும், போக்குவரத்தைச் சீரமைத்துச் சிறப்புடன் நடைமுறைப்படுத்த உலக வங்கியின் உதவியுடன் தமிழகப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தமிழக அரசு 7 கோடியே 22 இலட்ச ரூபாய் அனுமதித்துள்ளது.

காவல்துறைத் தலைவர் தலைமையில் தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் அதிகாரிகள் அடங்கிய குழு,ரூ.6 கோடியே 57 இலட்சம் செலவில் வாகனங்கள் மற்றும் நவீன கருவிகள் வாங்க முடிவு செய்து அதன்படி ஜீப்புகள், ஆம்புலன்ஸ்கள், கிரேன்கள், மோட்டார் சைக்கிள்கள், வயர்லெஸ் கருவிகள், கணிப்பொறிகள், சிக்னல்கள், புகைப்படக் கருவிகள் போன்றவை வாங்கப்பட்டன.

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள்—தலைமைச் செயலகத்தில், காவல்துறைத் தலைவர் திரு ராஜசேகரன் நாயர், இ.கா.ப., அவர்களிடம் 19.11.96 அன்று இக்கருவிகளை வழங்கினார். முன்னதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இக்கருவிகளைப் பார்வையிட்டார். வயர்லெஸ் கருவிகள் மூலமும் பேசிப் பரிசோதித்தார். புதிதாக வாங்கப்பட்ட ஜீப்புகளிலும் ஏறிப்பார்த்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், காவல்துறை உயர் அதிகாரிகள், அரசு உயர் அலுவலர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# மூதறிஞர் இராஜாஜி பொன்மொழிகள்

☐ தீண்டாமை என்பது நமது சமூகத்தில் ஒரு மாசு. தீண்டாமை ஒரு விஷப் பாம்பு. அதைக் கொன்றாக வேண்டும்.

☐ எவ்வளவு கல்வியும் செல்வமும் இருந்தாலும், அடக்கம் இல்லாவிடில் பண்பாடு என்பது இல்லை.

☐ பள்ளிக்கூடங்கள் தேசத்தில் எத்தனை இருந்தாலும், பண்பாட்டுக்குப் பள்ளிக்கூடம் வீடேயாகும்.

☐ வாழ்க்கையில் தைரியமாக இருப்பதைவிட மகிழ்ச்சி அளிக்கக் கூடிய விஷயம் வேறு என்ன இருக்க முடியும்!

☐ ஞானமும், பக்தியும் அனைவருக்கும் உரித்தான பெருஞ்செல்வம்.

☐ கோபம் கூடாது. அது முகத்தின் அழகைக் கெடுத்துவிடுகிறது. சாந்தமே முகத்திற்கு அழகு தருகிறது.

☐ ஒழுக்கத்துடனும், நாணயத்துடனும் ஒவ்வொருவரும் நடந்து கொண்டால், எல்லோருக்கும் நன்மை விளையும்.

☐ நம்முடைய சமூகம் சுதந்திர வாழ்க்கை அடைந்துவிட்டது. சுதந்திரத்துடன் சுகமும் பெறவேண்டுமானால், மக்கள் அற வழியில் நிற்கவேண்டும்.



## அது போதுமே!

கனவில் ஒரு நாள் சிங்கத்தின் பிடரி மயிரைப் பிடித்து உலுக்கினேன்.

சிங்கம் என்னிடம் கேட்டது-

"அடேயப்பா! உனக்கு எப்படி இவ்வளவு வீரம் வந்தது?"

நான் சொன்னேன்-

"நானும் ஆடு சாப்பிடுகிறவன்தானே!"





## வளையம்

மகன் தாயைப் பார்த்துக் கேட்டான்-

"தாயே, சாவு என்பது என்ன?"

தாய் சொன்னாள்

"வாழ்வின் முடிவு!"

மகன் கேட்டான் -

"வாழ்வு என்பது என்ன?"

தாய் சொன்னாள் -

"சாவின் தொடக்கம்!"

## ஒரே உண்மை

பாதிரியார் ஒருவர் பள்ளிப் பிள்ளை களுக்குப் பாடம் சொல்லிக் கொண்டு இருந்தார்.

எல்லா மாணவர்களையும் பார்த்து ஒரு கேள்வி கேட்டார்

"இங்கே இதுவரை ஒரு பொய்கூடச் சொல்லாத மாணவன் உண்டா?"

எல்லா மாணவர்களும் மௌனமாக நின்றனர். பாதிரியார் அமைதியாகப் பெருமூச்சு விட்டார். பிறகு சொன்னார் -

"கர்த்தரே, உமக்கு வணக்கம்! எங்கள் மக்கள் முதன் முறையாக மௌனத்தின் மூலம் ஒரேயொரு உண்மையைப் பேசி இருக்கிறார்கள்!"



- கவிஞர் கண்ணதாசன் எழுதிய 'குட்டிக் கதைகள்' என்ற நூலிலிருந்து வெளியீடு: வானதி பதிப்பகம், சென்னை-17

# இதய நோய்

டாக்டர் எஸ். அர்த்தநாரி

திடீரென்று எதிர்பாராமல் 30 வினாடிக்குள், அல்லது 1 மணி நேரத்திற்குள், அல்லது 24 மணி நேரத்திற்குள் ஏற்படும் மரணம் திடீர் மரணம் ஆகும்.

திடீரென்று நல்ல நிலையில் வாழ்ந்து வருகின்றவருக்கும் நல்ல செயலாற்றிக் கொண்டிருப்ப வருக்கும் விரைவாக வரும் இத்தகைய மரணம் அபாய நிலைக்குப் பின் வருவதும் எதிர்பாராததும் என்றும் இரண்டு வகைப்படும்.

அமெரிக்காவில் ஒவ்வொரு ஆண்டும் 6 இலட்சத்து 50 ஆயிரம் மக்கள் மாரடைப்பு கண்டு திடீரென மரணமடைகிறார்கள். இவர்களில் பாதிப்பேர் மருத்துவமனைக்குக் கொண்டு போவதற்கு முன்பே, வீட்டில் மரணமடைகின்றனர்.

61 சதவிகிதம் மாரடைப்பு மரணம், மார்பு வலி கண்ட முதல் 1 மணி நேரத்தில் வருகிறது. 54 சதவிகிதம் மாரடைப்பு மரணம் மார்புவலி கண்ட 24 மணி நேரத்திற்குள் வருகிறது. 75 சதவிகிதம் மாரடைப்பு திடீர் மரணம் இதயத்திற்கு இரத்தத்தை எடுத்துச்செல்லும் 3 கரோனரி இரத்தக் குழாய் அடைப்பினால் வருகிறது. இடது கரோனரி ரத்தக்குழாயினால் 75 சதவிகிதம் பேர் இவ்வாறு எதிர்பாராமல் திடீர் மரணமடைகிறார்கள். ஒவ்வொரு நிமிடமும் ஒருவர் என மாரடைப்பால் திடீர் மரணமடைகின்றனர்.

**திடீர் மரணத்தின் நான்கு நிலைகள்**

1. முன் எச்சரிக்கை நிலை
2. இறுதிநிலை அறிகுறிகள்
3. இருதயத் துடிப்பு நின்று விடுதல்.
4. உடல் திசுக்களின் உயிரிழப்பு.

**முன் எச்சரிக்கை நிலை**

இந்நிலையில் நோயாளிகளுக்கு மார்பு வலி, மூச்சுத் திணறல், படபடப்பு, சோர்வு, ஆகியவை ஏற்பட்டு இருக்கும். அந்த நேரத்தில் தக்க சிகிச்சைகளை அளித்தால் உடனடி மரணத்தி லிருந்து காப்பாற்றலாம்.

**இறுதிநிலை அறிகுறிகள்**

மேற்கூறிய நிலையிலிருந்து மாற்றத்தைக் காணலாம். அவர்கள் தலைபளுவிழந்து இருத்தல், இரத்த அழுத்தம் குறைதல், இருதயத் துடிப்பிலே மாற்றம் ஏற்படுதல் போன்றவை.

**இருதயத் துடிப்பு நின்று விடுதல்**

இந்த நிலையில் இருதயத் துடிப்பு நின்றவுடன் மூச்சும் நின்றுவிடுகிறது.

மூன்றாவது நிலையைத் தீவிர சிகிச்சை அளிக்காவிட்டால் அல்லது தீவிர சிகிச்சையில் தோல்வி ஏற்பட்டால் உடலிலே உள்ள திசுக்கள் உயிரிழக்கின்றன. இதை ஆங்கிலத்தில் 'பயோலாஜிக்கல்' டெத், என்பர்.

இருதயத்திலிருந்து ஓடும் இரத்த ஓட்டம் தடைப்பட்டால் உடனடியாகக் கவனித்து இரத்த ஓட்டத்தினைச் சீர் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் இருதயத்தின் துடிப்பு நின்றுவிடும் நிலை வரும். இருதயத் துடிப்பு நின்றபோது உடனடியாகத் தீவிர சிகிச்சை அளித்து உயிர்ப்பிக்க வேண்டும். இல்லாவிட்டால்



மரணம் ஏற்படும். இந்நிலையில் திரும்பவும் இருதயத்தை இயக்கி வைக்க முடியாது.

### எப்போது வரும்? எப்படி தடுப்பது?

வயது ஆக ஆக நம் உடலில் உள்ள இரத்தக் குழாய்களில் கொழுப்புச்சத்து படிந்து இரத்தக் குழாயின் விட்டத்தைச் சுருக்கி விடுவதோடல்லாமல் இரத்தக் குழாய் இறுக்கமாகி, விரிவடையும் தன்மையை இழந்துவிடுகிறது. குறிப்பாக இருதயத்திற்கு இரத்தத்தை எடுத்துச்செல்லும் கரோனரி இரத்தக்குழாய் தமனி இறுக்கத்தினால் தாக்கப்பட்டு இருதயத்திற்குக் குறைவாக இரத்தத்தைச் செலுத்துகிறது. இதனால் மார்பு வலி-மாரடைப்பு, ஏற்பட்டு மரணம் வருகிறது.

இவ்வகை மரணம் பெரும்பாலும் இளம் வயதினருக்கு வருகிறது; 25 முதல் 50 வரை.

76 சதவிகிதம் 20 முதல் 39 வயது வரை உள்ளவருக்கு வருகிறது.

62 சதவிகிதம் 45 முதல் 54 வயது வரை உள்ளவருக்கு வரும்.

58 சதவிகிதம் 55 முதல் 64 வயது வரை உள்ளவர்களைப் பாதிக்கும்.

42 சதவிகிதம் 65 முதல் 72 வயது வரை உள்ளவருக்கு வருகிறது.

மாரடைப்புக் காரணமான திடீர் மரணம் இளம் வயதினருக்கும் இயற்கை மரணம் வயோதிகர்களுக்கும் வருகிறது. ஆண்கள்தான் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். எந்த நாடு இனம் என்ற பாகுபாடு இல்லை. இவ்வகை மரணம் சில குடும்பங்களில் நிகழ்கிறது. தந்தை திடீர் மரணத்தினால் இறந்தால், மகன் திடீர் மரணத்தினால் இறக்க வாய்ப்பு அதிகமாக உள்ளது.

### மாரடைப்பு மரணம் வரும் காரணங்கள்

இளம் வயதினருக்கு இரத்தக் கொதிப்பு இருந்தால் திடீர் மரணம் ஏற்படும். இருதய மின் அலைப்படம் (இ.சி.ஜி) படத்தில் மாறுதல்கள் தெரிந்தால் மரணம் வர வாய்ப்புள்ளது. இரத்தத்தில் கெட்ட கொழுப்பு அதிகமாக இருத்தல், உடல் பருமனாக அதிகமாக இருத்தல், அதிகமான இருதயத் துடிப்பு ஆகியவற்றால் மாரடைப்பு ஏற்படும்.

படித்தவர்கள் விவரம் அறிந்தவர்கள் திடீர் மரணத்தின் காரணங்களை ஓரளவு அறிந்து அதற்கு ஏற்றவாறு தடுப்பு முறைகளை மேற்கொண்டு இவ்வாறான மரணத்தைத் தடுக்கின்றனர். படிக்காதவர்கள் அறியாமையினால் அதிகமாகத் திடீர் மரணத்தினால் இறக்கின்றனர்.

கரோனரி இரத்தக்குழாய் அடைப்புக்குச் சிகிச்சை செய்து வருபவர்களுக்கும் இந்த மரணம் வரலாம். இருதயத்தை நுண் நோய்க்கிருமிகள் வைரஸ், முதலியவை தாக்குதலால் ஏற்படும் மையோகாடைடிட்ஸ் நோயினால் இந்த உடனடி மரணம் ஏற்படலாம். சுரவாங்கி என்ற மூட்டு வீக்க வால்வு நோய்கள் இந்த மரணத்தை அளிக்க வல்லது. பழுதடைந்த வால்வினை அகற்றி செயற்கை வால்வு பொருத்தியவர்களுக்கும் கூட இப்படி மரணம் வரும். இருதயத் துடிப்பில் வேறுபாடுகள் கண்டவர்கள் மரணமடைகின்றார்கள். இருதயத்தின்மேல்உறை பெரிகடாடைட்ஸ் என்ற வியாதியினால் பாதிக்கப்பட்டாலும் மரணம் ஏற்படும்.

பச்சிளம் குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் கூட இந்த வகையிலான திடீர் மரணம் வரலாம். இதற்குக் காரணங்கள் பிறவியில் வரும் இருதய நோய், மூளையிலுள்ள மூச்சு மையத்தின் பாதிப்பு ஆகியவைகளே.

### கண்டிப்பாக மரணம் அடைபவர்கள்!

1. இடது கரோனரி இரத்தக் குழாய் ஆரம்பப் பகுதியில் அடைப்பு உள்ளவர்கள்.

2. வீங்கிய இருதயம் உள்ளவர்கள்.

3. தாறுமாறான இருதயத் துடிப்புள்ளவர்கள்.

4. ஈரிதழ் வால்வு நீண்டு உள்ளவர்கள்.

5. இருதயத்தில் துடிப்பு மாறுதல் ஏற்பட்டவர்கள்.

மாரடைப்பு கண்டவர்களுக்கு மட்டுமே திடீர் என்று மரணம் வருவதில்லை. இருதயத்தில் பல வகை நோய்கள் உள்ளன; அந்த நோய்கள் பிறவியிலேயே வரும். இருதய நோய்கள் பல; குழந்தைகளுக்கு வரும் சுரவாங்கி, முட்டிவீக்க வால்வு நோய்கள் கண்டவர்களுக்குத் திடீர் மரணம் எந்த நேரத்திலும் வரலாம். மாரடைப்பைத் தவிர மற்ற இருதய நோய்கள் மாரடைப்பிற்குக் காரணமான கரோனரி

**விளாம்பழம்**

**நெஞ்சு வலிக்கிறதே என்று வேதனைப் படாமல் இருக்க விளாம்பழம் சாப்பிடுங்கள். நெஞ்சு வலி பறந்துவிடும்.**



இரத்தக்குழாய் அடைப்பு இல்லாத மற்ற நோய்களாவன:

தலையிலே அடிபடுதல், காக்கா வலிப்பு, பாரிசவாயு, அதிக மாத்திரை உட்கொள்ளுதல், ஊசிபோடும் போது ஏற்படும் ஒவ்வாமை. சர்க்கரை நோயினால் ஏற்படும் மயக்கநிலை ஆகியவைகள் மாரடைப்பைத் தவிர திடீர் மரணத்தை வரவழைக்கும் காரணங்கள்.

**மரணத்தின் அடிப்படை**

இரத்தக் குழாய்களில் ஏற்படும் ரத்தக் கொழுப்பு அடைப்பு பிறகு திடீரென்று இரத்தம் உறைந்து இரத்தக்கட்டி ஏற்பட்டு குழாயில் முழு அடைப்பு ஏற்படுதல். கரோனரி இரத்தக்குழாய் சுருக்கம், மாரடைப்பினால் ஏற்படும் இருதயத்தின் இடது கீழ்அறை வீக்கம், இருதயம் இயங்க இருக்கும் மின்அலை செல்லும் பாதையில் மாற்றம் ஆகியவை திடீர் மரணத்தின் அடிப்படைக் காரணங்கள்.



**'கார்டியா அரஸ்ட்'**

இருதயத் துடிப்பு நின்று விடுவது மட்டுமல்லாமல் மூச்சும் நின்றுவிடுவதுதான் கார்டியா அரஸ்ட்.

ஒருவன் மரணத்தை அடைவதற்கு முன்பே அவனுக்கு இருதய துடிப்பு நின்ற சில வினாடிகளில் சுவாசமும் நின்று விடுகிறது. 6 நிமிடங்களுக்கு மேல் நீடித்தாலும் திடீர் முதலுதவிகளைச் செய்யாவிட்டாலும் மரணம்தான் ஏற்படும்.

தொண்டையில் உணவு மாட்டிக் கொள்ளுதல்; இரண்டாவது - செயற்கைப் பற்கள் மூச்சுக் குழாயிலே அடைத்தல்.

**இருதயத் துடிப்பு நிற்பதற்கான காரணங்கள்**

1. இருதயத் துடிப்பு ஒரு நிமிடத்திற்கு 72 தடவை துடிக்கிறது.

2. மாரடைப்பு கண்டவர்களுக்கு இந்தத் துடிப்பு தாறுமாறாக அடித்துக்கொண்டால் இதற்கு வென்றிக்குரல் டாக்காட்டியா - இருதயம் இயங்காமல் நின்றுவிடுவதற்கு வென்றிக்கில் ஏசிஸ்டோல் என்று பெயர்.

3. இருதயத் துடிப்பு, இரத்த ஓட்டமும் நின்றபின் இருதயத்தின் மின் அலை மட்டும் வரைபடத்தில் தெரியும் எலெக்ட்ரோ, மெக்கானிக்கல் டிசசோசியேசன்.

**இருதயத் துடிப்பு தாறுமாறாக மாறக் காரணம்**

1. இருதயத்தில் உள்ள தசைகளில் ஏற்படும் மின்சாரம் ரசாயன மாற்றங்கள் மற்றும் மின்சார அலையில் ஏற்படும் மாற்றம்.

2. இருதயம் தானாக இயங்கி மின் இயக்க சக்தியில் மாற்றம்.

**இருதய துடிப்பை மூச்சுநின்றபின் அறிவதெப்படி?**

இருதயத் துடிப்பும் மூச்சடைப்பும் நிற்பதற்குச் சில வினாடிகளுக்கு முன்பு அமைதியின்றியும் துடிப்போடும் இங்கும் அங்கும் அலையும் தன்மை ஏற்படும். சம்மந்தமில்லாமல், இடம் நேர மறியாது எதையாவது பேசுவார். இவைகள்தான் மிக முதல் அறிகுறிகளாகத் தோன்றும். மேலும் மூச்சடைப்பு, படபடப்பு, முகம் வெளுத்துக் காணப்படுவது அதிகமாக வியர்ப்பதும் இருக்கும். அத்துடன் மூச்சுவிடக் கஷ்டப் பட்டுக் கொண்டிருப்பார்.

**இறுதி அறிகுறிகள்**

கை, கால், கழுத்து முதலியவைகளுக்கு ஓடும் இரத்தக்குழாயில் துடிப்பு இருக்காது. இருதயத் துடிப்புச் சத்தம் கேட்காது. மூச்சு நிற்பது, இருதய துடிப்பு நின்ற 60 வினாடிகள் கழித்து நின்றுவிடும். கண்களிலுள்ள பாப்பா விரிந்திருக்கும். சில நேரங்களில் வலிப்பு ஏற்படும். இருதய மின் அலையில் தாறுமாறான துடிப்பு இருக்கும்.

**திடீர் மரணத்திற்குப் பிறகும் மறுவாழ்வு**

1. முதலில் நின்ற இருதயத் துடிப்பினை மீண்டும் இயக்க வைக்கலாம்.

2. மூளைக்குப் போதிய பிராணவாயுவினைச் செலுத்த வேண்டும்.

3. நின்றுவிட்ட மூச்சினைத் திரும்பவும் ஆரம்பிக்க வேண்டும்.

இந்த 3 முக்கிய நோக்கத்தோடு நோயாளிக்கு மறுவாழ்வுச் சிகிச்சை அளிக்க வேண்டும். அவைகள்:

1. ஆரம்பச் செயல்கள்.

2. அடிப்படை இருதயத் துடிப்பு உதவி.

3. உயர்நிலைத் துடிப்பு உதவி.

4. இருதயத் துடிப்பு நின்ற பின் மறுவாழ்வுச் சிகிச்சையின் கண் காணிப்பு.

5. நீண்டகால ஆலோசனை - வைத்தியம்.

**ஆரம்பச் செயல்கள்**

இருதயத் துடிப்பும் மூச்சும் நின்றதைச் சரிவர அறிந்து கொள்ள வேண்டும். தாக்கப்பட்டவர்களின் தோளிலே தட்டி 'அலோ' என்று அழைக்கவேண்டும். அப்போது எந்தவிதப் பேச்சும் இல்லை என்று அறிந்தவுடன் பக்கத்தில் உள்ளவர்களை உதவிக்கு அழைக்க வேண்டும். அந்த நேரத்தில் தாக்கப்பட்டவரின் கழுத்தில் - கோரசில் கைவைத்து இரத்த ஓட்டம் உள்ளதா என்று கவனிக்க வேண்டும். அதோடு, மூக்கின்மேல் கை வைத்து மூச்சு விடுகின்றாரா என்றும் தெரிந்து கொள்ள வேண்டும்.

இருதயத் துடிப்பு நின்ற பின்பு தான், மூச்சு நின்றது என்பதை அறியவேண்டும். அறிந்தபின் மார்பின் மேல் லாவகமாக ஓங்கிக் குத்த வேண்டும். நமது குத்து மிகவும் வேகமாகவும், பலமாகவும் இருக்க வேண்டும். ஏனென்றால் தாறுமாறாக அடித்து நின்ற இருதயத்தை ஓங்கிக் குத்துவதால் தாறுமாறான துடிப்பு நின்று விடும். அதோடு இருதயமும், ஒழுங்காகச் சீராகத் துடிக்க ஆரம்பித்துவிடும். நமது கைக் குத்து ஒரு அடி தூரத்தில் இருந்து மார்பின் நடுப்பகுதியில் குத்த வேண்டும்.

**செயற்கை மூச்சு**

அடுத்து மூச்சுக் குழாயின் வழியை சுத்தம் செய்ய வேண்டும். மூச்சுக் குழாயில் சளி, நீர் இருந்தால் அதை நீக்க வேண்டும். அதன் பிறகு முகட்டினை மேலே தூக்கி கழுத்தின் பின்பகுதி முதுகில் மேல்படும்படி தள்ளி, வாயைத் திறக்க வேண்டும்.

அடிப்படை உதவி என்பதால், மூச்சுக் குழாயினை மேற்கூறிய முறையில் சுத்தப்படுத்தி வாயைத் திறக்க வேண்டும். அதன்பின் வாயோடு வாய் வைத்துக் காற்றினைத் தாக்கப்பட்டவர் வாயில் ஊத வேண்டும். இதையே மருத்துவமனையாக இருந்தால் மூச்சு இயக்க செயற்கை மூச்சுக் கருவிகளைப் பொருத்தி மூச்சு இயக்கத்தைச் சரி செய்யலாம்.

இருதயத் துடிப்பை இயக்க தாக்கப்பட்டவரின் மார்பின் நடுப்பகுதியில் நமது வலது கையை வைத்து அதன்மீது இடது கையை வைத்து அழுத்த வேண்டும். அப்படி அழுத்தும்போது இதயத்தின் மீது அழுத்தம் ஏற்பட்டு இருதயம் துடிக்க ஆரம்பிக்கும். அதே நேரத்தில் செயற்கை மூச்சு இயக்கத்தையும் செய்யவேண்டும்.

> **மார்புச்சளி மறைய**
>
> **ஒரு கைப்பிடி முருங்கைக் கீரையை ஒரு டம்ளர் தண்ணீரில் வேகவைத்து, குளிரவைத்து உப்பு, மிளகு எலுமிச்சைச்சாறு கலந்து குடித்துவந்தால் மார்புச் சளி குணமாகும். சிலருக்கு ஆஸ்துமாகூட குணமாகும்.**

**நவீன சிகிச்சை முறைகள்**

இவைகளை ஏழு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. ஆரம்பச் செயல் முறைகள்.

2. நவீன கருவிகளை உபயோகித்தல்.

3. இருதயத் துடிப்பினைக் கண்காணித்தல்.

4. இருதயத் துடிப்பு இயக்கக் கருவிகளை உபயோகித்தல்.

5. இரத்தக்குழாய்கள் மூலம் மருந்துகளைச் செலுத்துதல்.

6. சரியான மருந்துகளை உபயோகித்தல்.

1. உடலில் ஏற்படும் இரசாயன மாற்றத்திற்கு மருந்து.

2. இரத்த ஓட்டத்தைச் சீராக்க மருந்துகள்.

3. இருதயத் துடிப்பு தாறுமாறாகத் துடிப்பதைச் சீராக மாற்றுதல்.

7. நோயாளியை நல்ல நிலைக்குக் கொண்டுவருதல்.

இருதயத் துடிப்பினைக் கண்காணித்துக் கொண்டு தாறுமாறான மாற்றங்களை அறிந்து, உடனுக்குடன் மருந்துகளை இரத்தக்குழாய் மூலம் செலுத்தி இருதயத் துடிப்பினைச் சீராக்க வேண்டும்.

இருதயத் துடிப்பு தாறுமாறாக இயங்குவதால் இருதயம் செயலிழந்து நின்று விடுகிறது. தாறுமாறாக வேகமாக இயங்கும் இருதயத் துடிப்பினைச் சரிசெய்ய மார்பின் மீது ஓங்கி குத்திவிட்டு சரியாக இயங்காவிட்டாலும், அதே நேரத்தில் இரத்தக்குழாய் துடிப்பு கழுத்தின் பகுதியில் இல்லாவிட்டால் உடனடியாக இருதயத் துடிப்பு இயக்கக் கருவியினை உபயோகப்படுத்தி இரண்டு தட்டையான பிளேட்டுகளை ஒன்று மார்பின் இடது புறத்திலும் மற்றொன்றினை மார்பின் நடுப்பகுதியிலும் வைத்து 250 ஜூல்வல் மின்சாரத்தைச் செலுத்த வேண்டும். அப்படி மின்சாரத்தைச் செலுத்தும் போது இருதயம்

**வயிறு பசிக்க**

**கொய்யா மரத்து இலை இரண்டைப் பிடுங்கித் தின்றால் வயிறு பசிக்க ஆரம்பித்து விடும்.**

சீராக இயங்கச் செய்கிறது. முதல் முறையில் வெற்றியடையாவிட்டால் இரண்டாவது முறையில் சற்று கூடுதலாக மின்சாரத்தைக் கொடுத்து அதாவது 300 ஜூவல் கொடுக்க வேண்டும். இது போன்று 3 அல்லது 4 முறைகள் மின்சாரத்தைச் செலுத்தினால் இருதயத் துடிப்பு மறுபடி வரும்.

இருதயத் துடிப்பு சீராக இயங்கியபிறகு, விட்டோகையின் என்ற மருந்தினை இரத்தக்குழாய் மூலம் உள்ளே செலுத்த வேண்டும். அப்படியும் இயங்கவில்லையென்றால் மாற்று மருந்து பிரிட்டிலியம் டோசிலேட் என்ற மருந்தினைக் கொடுக்க வேண்டும். சோடா பை-கார்பனேட் என்ற மருந்தினையும் கொடுக்க வேண்டும். அப்படியும் இருதயம் இயங்கவில்லையென்றால் மறு முறையும் துடிப்பு இயங்குவதற்கு மின்சாரத்தைச் செலுத்த வேண்டும்.

இந்த முறைகளைப் பலமுறை கையாண்டு எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லையென்றால், இந்தத் தீவிர சிகிச்சை முறையைக் கைவிட வேண்டும். அதற்கு முன்பு இருதய மின் அலை இ.சி.ஜி. மூச்சு முதலியவைகள் நின்றுவிட்டது என்பதை உறுதியாகத் தெரிந்த பின்புதான் கைவிட வேண்டும். உணர்வு இழந்து இருதயத் துடிப்பும் மூச்சு இயக்கமும் இயங்காமல் இருந்து, கண் விழித் திரை பாப்பா பெரியதாகத் தெரிந்தால் மரணம் அடைந்துவிட்டார் என்று கூறலாம்.

இந்தத் தீவிர சிகிச்சை முறையில் வெற்றி கண்டு நோயாளி பிழைத்துக் கொண்டால், அவர்களை நன்றாகப் பரிசோதனை செய்து அவர்களுக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளதா, மார்பு வழி சார்பு நோய் உள்ளதா, தாறு மாறாக இயங்கும் இருதயத் துடிப்பு உள்ளவரா என்ற விவரங்களை இருதயம் மின் அலை படம் இ.சி.ஜி. பயிற்சி இருதய மின் அலை படம் இ.சி.ஜி. இருதயம் உள் ஆராய்வு செய்து இருதயத்திற்கு இரத்தத்தை எடுத்துச் செல்லும் இரத்தக்குழாயில், எந்த இரத்தக்குழாயில் அடைப்பு ஏற்பட்டுள்ளது என அறிந்து அதற்கு ஏற்றாற்போல் சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும்.

கரோனரி இரத்தக்குழாய் அடைப்பை எடுத்தவுடன் அறுவை சிகிச்சை செய்யத் தேவையில்லை. மருந்துகள் உட்கொண்டும், மார்பு வழியின் கடுமை நாளுக்குநாள் அதிகமாகி அன்றாட வேலைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டால் கரோனரி பைப்பாஸ் என்ற அறுவை சிகிச்சை செய்து கொள்ளலாம். கரோனரி பைப்பாஸ் அறுவை சிகிச்சையும் முழு குணத்தையும் கொடுக்காது. இந்த அறுவை சிகிச்சை மூலம் இருதயத்திற்குச் சிறிது அதிகமாக இரத்தத்தைச் செலுத்த இயலும். அதனால் மார்புவலி குறைந்து தடைபட்ட அன்றாட செயல்களை, மீண்டும் வேதனையில்லாமல் செய்ய இயலும். அவ்வளவே!

ஆனால் - கொழுப்புச் சத்துள்ள உணவைத் தவிர்த்தல், புகை பிடியாதிருத்தல், காலை-மாலை நடத்தல், ஏற்ற உடற்பயிற்சி செய்தல் போன்றவற்றின் மூலம் இதய நோய்க்கே ஆளாகாமல் இருக்கவும் முடியும்.

தமிழரசு
படிக்க... பயன்பெற... பாதுகாக்க
'தமிழரசு' தமிழ்
(மாதம் இருமுறை)
சந்தா விவரம்
ஆண்டுச் சந்தா .... ரூ. 72
அரையாண்டுச் சந்தா ... ரூ. 36
'தமிழரசு' ஆங்கிலம்
(மாதம் ஒருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ. 36
சந்தாத் தொகையை - மணியார்டர்
அல்லது பாங்க் டிராப்ட் மூலம்
அனுப்ப வேண்டிய முகவரி:
உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்,
அண்ணா சாலை
சென்னை - 600 002.

எங்கள் ஊர் பிரச்சினை

**பிரச்சினை:**

எங்கள் ஊர் சீர்காழி தாலுக்காவில் கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள புளியந்துரை என்கிற கிராமம். எங்கள் ஊரில் 3000 மக்கள் வசிக்கின்றனர். குடிநீருக்காகச் சென்ற ஆண்டு தண்ணீர்த் தொட்டி கட்டி, தெருத் தெருவாகப் பம்ப் வசதிகள் செய்துள்ளார்கள். 1 வருடத்திற்கு மேல் ஆகியும் இதுவரை குடிநீர் வந்தது கிடையாது. அதனால் அதைச் சரிசெய்து அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**எஸ். முருகேசன்**
புளியந்துறை அஞ்சல்
சீர்காழி வட்டம் 609 101

**தீர்வு:**

குறிப்பிடப்பட்டுள்ள கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட புளியந்துரை என்னும் ஊராட்சிக்குட்பட்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்குச் செல்லும் மின் ஓயர்களில் அடிக்கடி மின் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுவதால், மின் இணைப்பு அவ்வப் போது துண்டிக்கப்படுவதுடன், மோட்டார் காயில் தீய்ந்து விடுகிறது. மேற்கண்ட குறைகள் அவ்வப்போது சீர்செய்யப்பட்டு வருகின்றன. மேலும் மின் ஓயர்கள் அமைந்துள்ள இடத்தில் மரங்கள் அடர்ந்து உள்ளதால் அடிக்கடி மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு விடுகிறது. தற்போது மேற்கண்ட மரக் கிளைகள் அனைத்தும் வெட்டப்பட்டு, மின் வாரியத்தினை அணுகி மின் ஓயர்கள் சரிசெய்யப்பட்டு இப்போது மோட்டார் நல்ல நிலையில் இயங்கி அனைத்துத் தெருக்களிலும் உள்ள பைப்புகளில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது, என்ற விவரத்தைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பெ. ரங்கன்**
ஆணையர்
ஊராட்சி ஒன்றியம், கொள்ளிடம்.

**பிரச்சினை:**

காமராசர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், திருச்சுழி ஒன்றியம், கீழ்க்குடி கிராமத்தில் உள்ள நடுநிலைப்பள்ளி மாணவர்கள் எழுதுவது, எங்கள் பள்ளியில் தற்போது இருநூற்று முப்பத்தொன்று மாணவர்கள் பயில்கிறார்கள். எங்கள் பள்ளிக்கென 1982ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தில் பள்ளிக் கட்டடம் ஒன்று திருச்சுழி ஊராட்சி ஒன்றியத்தால் கட்டப்பட்டது. இக்கட்டடம் இதுநாள் வரை பள்ளிக்கென வழங்கப்படவில்லை. சில ஆண்டுகளாக இக்கட்டடத்தில் பாலர் பள்ளி சத்துணவு மையம் நடைபெற்றுவருகின்றது. சித்தா மருத்துவமனை நடைபெற்று வருகின்றது. பள்ளிக்கெனக் கட்டப்பட்ட இக் கட்டடத்தை எங்களுக்கு வழங்காமையால் நாங்கள் இடமின்றி மழையில் நனைகிறோம். வெயிலில் காய்கின்றோம். காற்றில் கஷ்டப்படுகின்றோம். பள்ளிக்கெனக் கட்டப்பட்ட இக்கட்டடத்தை எங்களுக்கு மீட்டுத் தருமாறு வேண்டுகிறோம்.

**ஆறாம் வகுப்பு**
**மாணவ, மாணவிகள்,**
கீழ்க்குடி கிராமம்,
திருச்சுழி ஒன்றியம்,
அருப்புக்கோட்டை வட்டம்,
காமராசர் மாவட்டம்.

**தீர்வு:**

காமராசர் மாவட்டம், திருச்சுழி ஊராட்சி ஒன்றியம், கீழ்க்குடி கிராமத்தில் உள்ள பள்ளிக்கான ஒரு பிரதானக் கட்டடமும், இரண்டு கூடுதல் கட்டடங்களும் கட்டித்தரப்பட்டுள்ளன. இவற்றில் பிரதானக் கட்டடத்திலும், ஒரு கூடுதல் கட்டடத்திலும் தற்போது பள்ளி இயங்கிவருகிறது. ஒரு கூடுதல் கட்டடத்தில்தான் சித்தா மருத்துவமனை இயங்கிவருகிறது. இதனால் பள்ளியின் மாணவ மாணவிகளுக்கு எந்தச் சிரமமும் இல்லை. மேலும் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் **1995-96**ம் ஆண்டு கூடுதல் திட்டத்தின்கீழ் கீழ்க்குடி கிராமத்தில் கூடுதல் பள்ளிக் கட்டடம் ஒன்று கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் நக.சி**2/1120/95**, நாள் **17.9.96**ன்படி அனுமதி வழங்கப்பட்டு உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜி. குருசாமி**
ஆணையாளர்
திருச்சுழி ஊராட்சி ஒன்றியம்
காமராசர் மாவட்டம்



# கூட்டுறவுத்துறையின் சாதனை மணக்கும் பணிகள்

43-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவை (நவம்பர் 14ந் தேதி முதல் 20ந் தேதி வரை) முன்னிட்டு கூட்டப் பட்ட செய்தியாளர்கள் கூட்டத் தில் 7.11.96 அன்று மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு வே. தங்கப்பாண்டியன் அவர்கள் கலந்துகொண்டார். அப்போது கூட்டுறவுத்துறையில் நிறை வேற்றப்பட்ட பணிகள் குறித்து அவர் குறிப்பிட்ட விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

☆ நடப்பு நிதியாண்டில் குறுகிய காலக் கடன் ரூ.287 கோடி வழங்கப்பட்டிருக்கிறது.

☆ மத்திய காலக் கடன் கடந்த 6 திங்களில் வழங்கப்பட்டத் தொகை ரூ.20.40 கோடி, நீண்ட காலக் கடன் 6 மாதத்தில் ரூ.32.67 கோடி வழங்கப்பட்டது.

☆ நகைக் கடன் ரூ.2000 கோடி வழங்க இலக்கு. கடந்த 6 மாதங்களில் வழங்கப்பட்ட நகைக்கடன் ரூ.1153 கோடி .

☆ வாழ்வில் நலிவுற்றவர்கள் 70 சதவிகிதம் பயனடைய இலக்கு. 6 மாதத்தில் சாதனையும் 70 சதவிகிதம் ஆகும்.

☆ பண்ணைச்சாராக் கடன் திட்டத்தில் சிறு தொழில்கள் தொடங்குவதற்கு ரூ.36 கோடி வழங்கப்பட்டுள்ளது.

☆ வேளாண்மைக்கு ரூ.75 கோடி அளவிற்கு உர விற்பனை செய்யப்பட்டுள்ளது.

☆ விளைபொருள்கள் விற்பனை ரூ.425 கோடி இலக்கு. இது காறும் வேளாண் விளை பொருள்கள் விற்பனை ரூ.318 கோடியாகும்.

☆ நுகர்வோர் நுகர்பொருள் விற்பனை இலக்கு ரூ.1850 கோடி. தற்போது நுகர் பொருள் விற்பனை ரூ.887 கோடி.

☆ தேர்ந்தெடுக்கப்பட்ட 30 வகை யான அத்தியாவசியப் பொருள் களை வெளிச் சந்தை விலையை விட 5 சதவிகிதம் குறைவான விலையில் விற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

☆ தீபாவளி பண்டிகையை யொட்டி தரமான பட்டாசு களை ரூ.50, ரூ.100 மதிப்பில் விற்பனை செய்வதோடு, சிறார்களுக்கென்று தனியாக வும் பட்டாசு பாக்கெட்டுகள் விற்பனை செய்யப்பட்டன.

☆ இத்தகைய சலுகை விற்பனை 25.10.96 முதல் 9.11.96 வரை இடைவெளியின்றி விற்பனை செய்யப்பட்டது. பண்டக சாலைகளில் குறிப்பிட்டத் தொகைக்கு மேல் பொருள்கள் வாங்குவோர்க்குப் பரிசு கூப்பன்கள் வழங்கப்பட்டன.



☆ திருவாரூர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைக்கு புணரமைப்பிற்காக பங்கு மூலதனம் ரூ.21 இலட்சம்.

☆ அடையாறு மகளிர் கூட்டுறவு பண்டக சாலையில் நவீன சில்லரை விற்பனை நிலையம் அமைக்க ரூ.2 இலட்சமும், இராணிப்பேட்டை கூட்டுறவு பண்டகசாலையில் நவீன கூட்டுறவு சில்லரை விற்பனை நிலையம் அமைக்க ரூ.2 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

☆ இராமநாதபுரம் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை, சிவகாசி நுகர்வோர் லித்தோ ஓர்க்ஸ், தொழிலாளர் கூட்டுறவுப் பண்டகசாலை, உதகமண்டலம் கூட்டுறவு பண்டகசாலை ஆகியவற்றிற்கு மூன்று சில்லரை விற்பனை நிலையம் அமைக்க தலா ரூ.1.35 இலட்சம், ஆக மொத்தம் ரூ.4.05 இலட்சம், திருபுவனம் கூட்டுறவு பண்டகசாலை, புஞ்சை புளியம்பட்டி கூட்டுறவு பண்டகசாலை, திண்டுக்கல் தபால் தந்தி ஊழியர்கள் கூட்டுறவு பண்டகசாலை ஆகியவற்றிற்குச் சிறிய அள விலான மூன்று சிறிய விற்பனை நிலையம் அமைக்க தலா ரூ.60 ஆயிரம் வீதம் ரூ.1.80 இலட்சம் நடப்பு நிதியாண்டில்

பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

☆ விவசாயிகளுக்கு உடனடியாக கடன் வழங்குவதற்கு 3.10 இலட்சம்பேர்களுக்கு பச்சை வண்ண அட்டைகள் வழங்கி ரூ.119.37 கோடி கடன் வழங்கப் பட்டிருக்கிறது.

☆ வாழ்வில் நலிவுற்றவர்களுக்கு 30.9.96 வரை குறுகிய, மத்திய காலக் கடன் ரூ.176.17 கோடி வழங்கப்பட்டுள்ளது.

☆ ஆதிதிராவிடர்களுக்குக் குறுகிய கால, மத்திய காலக் கடன் ரூ.35. 55 கோடி, நீண்ட காலக் கடன் ரூ.32.67 கோடியும் 30.9.96 வரை வழங்கப்பட்டிருக்கிறது.

☆ தேவையின் அடிப்படையில் சிறு வியாபாரங்கள் செய்வ தற்கு 3 ஆயிரம் பேருக்கு ரூ.40 இலட்சம் கடன் வழங்கப் பட்டிருக்கிறது.



☆ மலைவாழ் மக்களுக்கு நுகர் பொருள்கள் விநியோகிப்ப தற்காக 30 கூண்டு வண்டிகள் ரூ.97.57 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன.

☆ மலைவாழ் மக்களுக்குக் கடன் வசதி வழங்குகின்ற வகையில் அரசு மானியம் ரூ.117.37 இலட்சம் நடப்பாண்டில் வழங்குகிறது.

☆ ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டப் பணிகள் கோவை, திருவண்ணாமலை சம்புவராயர் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இத் திட்டப் பணிகள் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்., இராமநாதபுரம் மாவட்டங்களிலும் தலா ரூ.8.19 கோடி, மதிப்பீட்டில் 1997-98ல் தொடங்க உள்ளன.

43வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவையொட்டி,

☆ மருத்துவ வல்லுநர்கள் நேர் காணல்,

☆ மக்கள் நோய் அறிதல் முகாம்.

☆ இலவச பல் சிகிச்சை மற்றும் கண் சிகிச்சை முகாம்.

☆ தோல் சிகிச்சை முகாம்.

☆ இரத்ததான முகாம்.

☆ மரக்கன்றுகள் நடும் முகாம்.

☆ சுற்றுச் சூழல் முகாம்.

ஆகிய முகாம்கள் நடத்தப் பட்டன. இதன்மூலம் பல்லாயிரக் கணக்கான மக்கள் பயனடைந் தார்கள்.


SEENIAPPA TILE FACTORY

MANAMADURAI - 623 606

PHONE:

Office: 68526

Factory: 68626

Manufacturers of:

Quality Raja Mark Roofing Tiles, Ridges, Flooring Tiles



# கோடு தாண்டிய கோதை

**- அன்னம்**

இரவின் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு நெல்லை எக்ஸ்பிரஸ் சீரான வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தது.

ஜன்னல் ஓரமாக அமர்ந்திருந்தாள் சௌம்யா, பௌர்ணமிக்கு இரண்டு நாட்களே இருந்ததாகையால், மேகமற்ற வானிலிருந்து சந்திரன் விழிக்கு இதமான ஒளியினால் உலகைப் போர்த்தியிருந்தான். அவளுக்கு நேர் எதிரே அமர்ந்திருந்த கௌதமன் தன் கால்களை உரிமையுடன் அவள் மடியில் போட்டுக் கொண்டிருந்தான்.

அவர்கள் இருவரும் வாழ்க்கையில் இணைந்து மூன்று நாட்கள் தான் ஆகின்றன. திருமணம் முடிந்த பின் தேனிலவிற்கு என்று எல்லோரும் ஊட்டி, கொடைக்கானல் என்று போவார்கள். இவர்களோ கல்லிடைக் குறிச்சிக்குப் பக்கத்தில் ஒரு கிராமத்திற்குப் போய்க் கொண்டிருந்தார்கள்.

சௌம்யாவுக்கு என்னவோ இதில் விருப்பம் இல்லைதான். ஆனால், கௌதமனுடைய அப்பாவின் பேச்சைத் தட்ட முடியவில்லை. கௌதமனின் தாத்தா ஸ்வாமிநாத ஸ்ரௌதிகள் ஊரில் இருந்தார். வயது கிட்டத்தட்ட தொண்ணூறு. கூடப் பழுத்த சுமங்கலி பாகீரதி பாட்டியும் இருந்தாள். அவர்களிடம் ஆசிர்வாதம் பெற்று உள்ளூர்க் கோவிலில் நேத்திக் கடன்களை முடித்துவிட்டுத்தான் வர வேண்டும் என உறுதியாகச் சொல்லிவிட்டார்.

தாத்தா குடும்பத்திற்கு மூத்தவர். நான்கு தம்பிகள், மூன்று தங்கைகளை வளர்த்து ஆளாக்கியவர். அவருக்கேமூன்று பிள்ளைகள். ஐந்து பெண்கள். கௌதமனின் அப்பாதான் கடைசிப் பிள்ளை. சப்ஜட்ஜாக இருந்து ஓய்வு பெற்றவர். வயது அதிகம் ஆனாலும் திடமாக இருந்தார். ஊரில் எல்லோராலும் மதிக்கப் படுபவர். குறையாத செல்வம் உள்ளவர். பதினைந்து வருஷங்களாக ஊரைவிட்டு எங்கேயும் வெளியே வருவதில்லை. வீட்டில் விரிவான பூஜைகள் உண்டு. கணீரென்ற குரலில் பாராயணம் செய்வார். நல்ல மனம். எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும் என நினைப்பவர்.

கௌதமன் தன் தாத்தாவைப் பற்றிப் புகழ்ந்து கொண்டே பேசினான்.

'ரொம்பக் கட்டுப்பாடு இருக்குமோ? எனக்குப் பயமாக இருக்கிறது கௌதம்.

'இதில் தான் எல்லா விவகாரமும் ஆரம்பிக்கிறது. புருஷனைப் பெயரிட்டுக் கூப்பிடுவது தாத்தாவுக்குப் பிடிக்காது. பல் தேய்க்காமல் காப்பி சாப்பிடுவது புருஷர்கள் நின்று கொண்டிருக்கும்போது உட்



காருவது, அவர்கள் சாப்பிட்டு முடிக்குமுன் தான் சாப்பிடுவது, அனாவசியமாக இரைந்து பேசுவது, சிரிப்பது..'

'ஓ! காட்... நமக்கெல்லாம் ஆகாதப்பா, பேசாமல் திரும்பி விடலாம்.'

'அதே வீட்டில் என் பாட்டி எழுபது வருஷங்களுக்கு மேல் வாழ்ந்திருக்கிறாள் என்ன சொல்கிறாய்?'

'கிராமத்துக் கட்டுப்பெட்டி, கிணற்றுத்தவளை.'

'இல்லை என் பாட்டி படிக்காதவள் இல்லை. உன் மாதிரி கான்வெண்டில் படித்து தாட்பூட் என இங்கிலீஷில் பேசத் தெரியாதவள்தான். ஆனால் காளிதாசனின் காவியங்கள் அத்தனையும் பாடம்., இந்த எண்பத்திரண்டு வயதிலும் குரலில் பிசிறு தட்டாமல் பாடுவாள்.

'அம்மாடி, பாட்டியைப் பற்றிச் சொன்னால் என்னமாக கோபம் வருகிறது? உரலில் மாட்டிக் கொண்டாயிற்று. இனி உலக்கைக்குத் தப்பமுடியுமா! இந்த நான்கு நாட்களில்தான் எப்படி நடந்து கொள்ள வேண்டும். சொல்லுங்கள்.

'காலையில் ஐந்தரை மணிக்கெல்லாம் எழுந்திருக்க வேண்டும். பல் தேய்த்து, முகம் கழுவி, பொட்டிட்டு'...

'இதெல்லாம் எனக்குத் தெரியும். மேலே சொல்லுங்கள்.' 'பெட் காப்பி' கேட்காமல், புதிதாக வந்த மாட்டுப் பெண் வாசலில் கோலம் போட வேண்டும். தினமும் தலைக்குக் குளிக்க வேண்டும். கீழே தலைமுடி உதிராமல் கவனமாக இருக்க வேண்டும். குளித்த பிறகுதான் காப்பி.'

'பத்து மணிக்காவது கண்களில் காட்டுவார்களா?"

'நீ குளித்து முடித்துவிட்டு வந்தவுடன் காப்பி தயாராக இருக்கும். பாட்டி கைக் காப்பி ஒரு தரம் சாப்பிட்டால் அங்கேயே தங்கக் கூட விரும்புவாய். அத்தனை அமிர்தமாக இருக்கும்.'

"சரி .. அப்புறம்?"

"தாத்தா சீக்கிரம் எழுந்து விடுவார். தன் ஜபதபங்களையெல்லாம் முடித்து விட்டு பூஜைக்கு உட்கார்ந்தால் அது முடிய மணி பன்னிரண்டு ஆகும். குளிக்காமலோ நம் மரபுப்படி புடவை உடுத்தாமலோ பூஜை அறைக்குள் போகக் கூடாது."



**'இதெல்லாம் எனக்குத் தெரியும். மேலே சொல்லுங்கள்.' 'பெட் காப்பி' கேட்காமல், புதிதாக வந்த மாட்டுப் பெண் வாசலில் கோலம் போட வேண்டும். தினமும் தலைக்குக் குளிக்க வேண்டும். கீழே தலைமுடி உதிராமல் கவனமாக இருக்க வேண்டும். குளித்த பிறகு தான் காப்பி.'**

"உங்கள் அம்மா சொல்லி அனுப்பியிருக்கிறார். ஒன்பது கஜப் புடவை கொண்டு வந்திருக்கிறேன்."

"கொண்டு வந்தால் போதுமா? கட்டிக் கொள்ளத் தெரிய வேண்டாமா?"

சௌம்யா அவனை அடிக்கக் கையை ஓங்கினாள்.

தெரியாவிட்டால் பரவாயில்லை. பாட்டி சொல்லிக் கொடுப்பாள்'' என்றான் கௌதமன்.

"அப்புறம் உனக்குப் பன்னிரண்டு மணி வரை பசி தாங்காது என்று எனக்குத் தெரியும். மாடியில் நம் பெட்டியில் நிறைய பிஸ்கட் பொட்டலம் இருக்கும். சாப்பிட்டுக் கொள். கீழே வரும்போது வாயை நன்றாகத் துடைத்துக் கொண்டு வா." சௌம்யா சிரித்தாள்.

"நீங்கள் மாட்டிக் கொண்டு இருக்கிறீர்கள். அது தான் சொல்கிறீர்களா?"

"ஆமாம். அப்புறம் தாத்தா பூஜை செய்யும் போது சப்தம் போட்டு யாரும் பேசக் கூடாது. இருமல் தும்மல் வந்தால் தள்ளிப் போக வேண்டும்."

"மூச்சுவிடலாமா இல்லையா?" எனக் கேட்டாள் சௌம்யா இடக்காக.

"தாத்தா அதிர்ந்து பேச மாட்டார். தப்பு ஏதானும் நடந்தால் திட்ட மாட்டார். கத்த மாட்டார். தன்னையே தண்டித்துக் கொள்வார். அன்றைக்கு உபவாசம் இருப்பார். மற்றவர்களுக்குச் சிரமமாகப் போகும்."

சௌம்யா புரிந்து கொண்டாள். பயம் பூரணமாக விலகாவிட்டாலும் எப்படியாவது நான்கு நாட்கள் சமாளித்து விடலாம் எனத் தைரியம் வந்தது.

வீட்டு வாசலில் பாட்டி ஆரத்தித் தட்டுடன் காத்திருந்தாள். முதல் பார்வையிலேயே சௌம்யாவிற்குப் பாட்டியைப் பிடித்துப் போய்விட்டது. லட்சுமிகரமான முகம். கண்களில் கனிவு. பேச்சில் இதம்.

பழைய காலத்து வீடு. இருந்தாலும் நன்றாகப் பராமரிக் கப்பட்டிருந்தது. ரேழி நடையைத் தாண்டியவுடன் கம்பி போட்ட முற்றம். நான்கு புறமும் அறைகள். மழுமழு வென்ற மரத்தூண்கள். தேக்கு மரச் சட்டங்கள் போட்ட கூரை, கூடத்தில் டிவி. இருந்தது. வி.சி.ஆர் இருந்தது.

கௌதம் சௌம்யாவை மாடிக்குக் கூட்டிப் போனான். இரண்டே அறைகள் தான். கீழே விசாலமாக குளியலறை. நான் கடிக்கு ஆறடி இல்லை. பானை யில் வெந்நீர் கொதித்துக் கொண் டிருந்தது. இதமான சூட்டில் சௌம்யா குளித்து முடித்தாள். பக்கத்தில் உடை மாற்றிக் கொள்ளத் தனி அறை.

ஒன்பது கஜப் புடவைகளைப் பிரித்து உடுத்த முயன்ற சௌம்யா தோற்றுப் போனாள். பாட்டி உள்ளே வந்து கற்றுக் கொடுத்தாள். கட்டி விட்டாள் என்றே சொல்லலாம். கூந்தலைச் சீவிப் பின்னலிட்டு மல்லிகைச் சரம் சூட்டி மணப்பெண்ணைப் போல் அழைத்து வந்தாள்.

இதற்குள் பஞ்சகச்சம் கட்டிப் பட்டை பட்டையாக விபூதி பூசிக் கௌதமன் காத்திருந்தான்.

இருவருமாகப் பூஜை அறையில் நுழைந்தார்கள். அங்கே சௌம்யா தாத்தாவை முதல் முறையாகப் பார்த்தாள்.

கிட்டத்தட்ட ஆறடி உயரம் இருப்பார். நல்ல சிவந்த நிறம் பட்டையான கரைபோட்ட வேட்டி, அங்கவஸ்திரம், மனையில் இருந்தபடியே நமஸ்கரிக்கச் சொன்னார்.

சௌம்யா கௌதமின் இடது பக்கம் நின்றபடியே நமஸ்கரிக்க யத்தனித்தாள்.

"உம்..." என்ற உறுமல் தாத்தாவின் கண்டத்திலிருந்து எழுந்தது.



பாட்டி அவசர அவசரமாக சௌம்யாவை கௌதமின் வலப் புறம் பிரதட்சிணமாக வரச் சொன்னாள். இருவரையும் இரண்டு கைகளால் பூ எடுத்துப் போட்டு விட்டு நமஸ்காரம் செய்யச் சொன்னாள். இரண்டு கைகளையும் தூக்கி பெரியவர் ஆசிர்வதித்தார்.

பகல் உணவு, தாத்தா, பேரன், மற்ற ஆடவர்கள் முதலில் சாப் பிட்டார்கள். பாட்டி, சௌம்யா வைப் பாயாசம் வைக்கச் சொல்லி அனுப்பினாள். ஒன்பது கஜப் புடவையில் நடக்கச் சிரமமாக இருந்தது. தாத்தாவிடம் இருந்த பயம், இலையில்பாயாசம் வைக்கும் போது தரையில் சிந்தி விட்டது. தாத்தா நிமிர்வதற்குள் பாட்டி துடைக்கத் துணியுடன் காத்திருந்தாள்.

பின்னர் சௌம்யா சாப் பிட்டாள். பாட்டி பக்கத்தில் உட்கார்ந்து உபசரித்தாள். எல் லோரையும் பற்றி அன்பாக விசாரித்தாள். சாப்பாடு முடிந்த வுடன் கூடத்திற்குப் போனார்கள். தாத்தா ஒரு கையால் விசிறியபடி ஊஞ்சலில் உட்கார்ந்தார்.

சௌம்யா ஒரு தூணைப் பிடித்தபடி நின்றாள். அவளை அவர் பல கேள்விகள் கேட்டார். அவள் படிப்பு பற்றி, அவள் உத்தியோகம் பற்றி, அவள் அப்பா, அம்மாவைப் பற்றி, சௌம்யா அசந்து போனாள். இந்த மனிதர் தான் எத்தனை விஷயங்கள் தெரிந்து வைத்திருக் கிறார். கிணற்றுத் தவளை என எடை போட்டது எத்தனை தவறு?

பகலில் படுப்பது அந்த வீட்டில் வழக்கம் இல்லை என எச்சரித்திருந்தான் கௌதம். அவனைத் தனியே சந்திக்கக் கூட அவளால் இரவு பத்து மணிக்குதான் முடிந்தது.

பாட்டி அவள் கையில் பால் செம்பைக் கொடுத்து மாடிக்கு அனுப்பினாள். முதலிரவு அறை போல உள்ளே ஜோடிக்கப் பட்டிருந்தது.

"ஆமாம். வீட்டில் இத்தனை பேர் இருக்கிறார்களே... யார்?" எனக் கேட்டாள் சௌம்யா.

"பாட்டி சொல்லவில்லையா?"

"சொன்னார்கள். மாமா, பேத்தி, அக்காள்கள், மருமகன் இப்படி ஏதேதோ"

"அது கூட எனக்குத் தெரியாது. நமக்கு நேருவைத் தெரியும். அவருக்கு நம்மைத் தெரியாது என்பார்கள் இல்லையா?" அது போலத்தான். அவர்களுக்கு நம்மைத் தெரியும். அது நமக்குப் போதும்' என்றான் கௌதமன் சுருக்கமாக.

மறுநாள் காலை.

ஐந்து மணி அடிக்கவில்லை.

சௌம்யா கௌதமை எழுப்பினாள். அவன் காதுகளில் மெது வாகச் சொன்னாள்.

"ஐயையோ..." என்றான் அவன் திடுக்கிட்டுப் போய். அவர்கள்



எதிர்பார்க்காத விபரீதம், ஒரு வாரத்திற்கு முன்பே.

"இப்போது என்ன செய்வது?" எனக் கையைப் பிசைந்தாள் சௌம்யா.

கௌதமன் பாட்டியைப் பார்த்து மெதுவாகச் சொன்னான்

"அட பாவமே... இருக்கப் போற நான்கு நாளிலே இது ஒரு கூத்தா?" என்றவள் பூஜை அறையை மூடினாள்.

சௌம்யாவைக் கீழே கூட்டிப் போனாள்.

பின்னர் வாயிற் திண்ணை ஓரத்தில் மரத்தடுப்புப் போட்ட அறையைக் காட்டினாள்.

"அங்கேயே இரு அம்மா. கதவைத் திறக்காதே. உனக்கு இதெல்லாம் பழக்கம் இல்லே. பார்த்து இருந்துக்கோடி குழந்தே."

வேலைக்காரி அதற்குள் சுத்தப்படுத்தியிருந்தாள். ஐந்தடி நீளமுள்ள பெஞ்சு போடப்பட்டிருந்தது. ஒரு போர்வை கொண்டு தந்தாள். ஒரு செம்பும் தம்ளரும்.

சௌம்யாவிற்கு அழுகை அழுகையாக வந்தது. அவர்கள் வீட்டு அல்சேஷியனுக்கு ஒதுக்கப் பட்ட இடம் இன்னும் கொஞ்சம் தாராளமாக இருக்கும்.

"தவறிப் போய்த் தாத்தா கண்ணில் பட்டுவிடாதே. குளிக்கப் புறப்பட்டு விடுவார்' என எச்சரித்தாள் பாட்டி.

அன்று வியாழக்கிழமை ஞாயிறன்று அவர்கள் திரும்பப் புறப்பட வேண்டும். வெள்ளிக் கிழமை காலையில்தான் கோவில் அபிஷேகம். ஆராதனை எல்லாம் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

வீட்டில் அத்தனை பேர் இருந்தாலும் இவள் வயதில் மனம் விட்டுப் பேச யாரும் இல்லை. ஒரே ஒரு பிள்ளைக் குழந்தை இரண்டு வயது முடிந்திருக்கும். 'அஸ்வின்' என்று பெயர். நேற்று அவளிடம் ஒட்டிக்கொண்டது. அது, இருந்தாலும் கூடப்போதும்.

ஏதோ யோசனையில் ஆழ்ந் திருந்த அவள் கதவை யாரோ பிறாண்டுவது போல் கேட்கவே சற்றே திறந்தாள். இரண்டு பிஸ்கட் பொட்டலம் உள்ளே வந்து விழுந்தது. அவசரமாகத் திரும்பிப்



**வீட்டு வாசலில் பாட்டி ஆரத்தித் தட்டுடன் காத்திருந் தாள். முதல் பார்வையிலேயே சௌம்யாவிற்குப் பாட்டியைப் பிடித்துப் போய்விட்டது. லட்சுமிகரமான முகம். கண் களில் கனிவு. பேச்சில் இதம்.**

போய்க் கொண்டிருந்த கௌதமின் முதுகு தெரிந்தது.

அஸ்வினின் தாய் குழந்தை யுடன் வாசலுக்கு வந்தாள். சௌம்யாவைப் பார்த்துச் சிரித் தான் குழந்தை. அவளிடம் போகத் தன் தாயின் இடுப்பிலிருந்து தாவினான். ஆனால் அவன் அம்மா விடவில்லை. அழ அழக் கூட்டிப் போனாள். வீட்டில் அவளுக்காகத் தனிச் சமையல் சுவையில் குறைவு இல்லைதான். நேரம் தப்பி. ஜெயில் கைதிக்குப் போடுவது போல். எல்லாவற் றையும் அவளே கழுவி, அவளே எடுத்துக் கொண்டுப் போய்க் கவிழ்த்து. அவள் நடந்த இட மெல்லாம் பின்னாலேயே ஒருவர் நீர் தெளித்தது...

சௌம்யாவிற்கு இம்மியும் பிடிக்கவில்லை. "சுத்த காட்டு மிராண்டி ஜனங்கள்!" எனச் சபித்தாள். முக்கியமாகத் தாத்தா வின் மேல் கோபம் வந்தது.

காலை ஒன்பது மணிக்கு எல்லாரும் கோவிலுக்குப் புறப் பட்டுப் போய்விட்டார்கள். திரும்பி வரப் பதினோரு மணி ஆகும் எனப் பாட்டி சொன்னாள்.

"நீ கூட வேண்டுமானால் கொஞ்சநேரம் திண்ணையில் உட்கார்ந்து கொள்!" எனச் சொல்லிவிட்டுப் போனாள் பாட்டி. பாவம் பெண் மனசு புரிந்தவள்.

மணி பத்தரை.

அஸ்வினுடைய தாய் வெளியே வந்தாள்.

தீபாராதனை ஆகும் நேரம்.

போய் எட்டிப் பார்த்துவிட்டு வருகிறேன்?" என்று சௌம்யா விடம் சொன்னாள்.

"அஸ்வின் எங்கே?" எனக் கேட்டாள்.

"உள்ளே தூங்கிக் கொண்டி ருக்கிறான்!" எனச் சொல்லி விட்டுப் போனாள் அவள்.

இன்னும் பத்து நிமிடங்கள் தான் இந்த விடுதலை கூட, மறுபடியும் கூண்டிற்குள் அடைப் பட்டாக வேண்டும்.

திடீரெனக் குழந்தையின் வீறிட்ட அழுகை. சௌம்யா தன் நிலை மறந்து உள்ளே ஓடினாள்.

அங்கே திறந்திருந்த பூஜை அறையினுள்ளே குழந்தை கீழே கிடந்தான். அவன் மேல் குத்து விளக்கு. ஆடையில் தீ.

தூக்கத்திலிருந்து எழுந்திருந் தவன், அம்மாவைத் தேடியிருக் கிறான். அகஸ்மாத்தாக பூஜை

அறையின் கதவு திறந்திருக்கவே எட்டிப் பார்த்து இருக்கிறான். தட்டில் இருந்த வாழைப் பழம் அவன் கண்ணில் பட்டிருக்கிறது. எடுத்துக் கொண்டு திரும்பியவன் கால்இடறிக் கீழேவிழ, குத்து விளக்குச் சாய்ந்து அதன் சுடர் அவன் ஆடையில் பற்றிக் கொள்ள...

சௌம்யா யோசிக்கவில்லை உள்ளே பாய்ந்தாள். குழந்தையை வாரி எடுத்தாள். தன் கையால் துணியைக் கசக்கித் தீயை அணைத்தாள். விசும்பிய குழந்தையைத் தோளில் போட்டுத் தட்டியவாறு வெளியே வர யத்தனித்த போது,

பூஜை அறை வாசலில் தாத்தா, பாட்டி, கௌதம்... எல்லோரும்!

குழந்தையைக் கீழே போட்டு விட்டு, பொங்கிவரும் அழுகையை அடக்க முடியாமல் வெளியே ஓடி வந்தாள்.

கௌதம் அவளைக் கோபத் துடன் வெறித்தான். "படித்துப் படித்துச் சொல்லியும் இப்படிச் செய்து விட்டாயே!' எனக் கோபித்தான்.

அலாதியான ஒரு மௌனம்.

குடம் குடமாகத் தண்ணீர் கொண்டு அறை கழுவப்பட்டது.

தன்மேல் கொட்டப்பட்ட அக்கினித் திரவமாகத் தெரிந்தது சௌம்யாவுக்கு. துடைப்பத்தால் தேய்த்துத் தேய்த்துப் பெருக்கினார்கள். தன்னையே இரண்டு அடி அடித்தால் கூடப் பரவாயில்லை எனப்பட்டது.

தாத்தா குளித்தார். பாட்டி குளித்தாள்.

மறுபடியும் பூஜை ஆரம்பமாகியது. மணி பன்னிரண்டு. ஒன்று தாத்தா எழுந்திருக்கவில்லை. சௌந்தர்யலஹரி முடிந்தது. மூகபஞ்சசதி நிறைவு பெற்றது. ஆனால் அவர் எழுந்திருக்கவில்லை.

அத்தனைப் பேரும் பட்டினி.



**ஒன்பது கஜப் புடவைகளைப் பிரித்து உடுத்த முயன்ற சௌம்யா தோற்றுப் போனாள். பாட்டி உள்ளே வந்து கற்றுக் கொடுத்தாள். கட்டி விட்டாள் என்றே சொல்லலாம்.**

பகல் இரண்டு மணி. தீபாராதனை மணி அடித்தது.

'பாட்டி மட்டும் உள்ளே போனாள்.

'சாப்பிட வாருங்கள்! என அழைத்தாள்.

இல்லை. நான் வரவில்லை. எனக்கு வேண்டாம்!

தெரியாமல் நடந்து விட்டது. இதற்காக...'

நீங்கள் எல்லோரும் போய்ச் சாப்பிடுங்கள். எனக்கு வேண்டாம் என்றால் வேண்டாம்.

இதோ பாருங்கள் அந்தப் பெண் குழந்தை... கத்தி யாரையாவது உதவிக்குக் கூப்பிட்டிருக்கலாம். தானே உள்ளே போனது தப்பு. பாவம், நான்கு நாட்கள் இருக்கப்போகிறாள் நம் கோபத்தை அவளிடம் காட்டி.'

பாகீரதி அவளா குழந்தை' சுவாமிநாதன் கேட்டார் உக்கிரமாக.

'ஆமாம், நம்ம பழக்கம் வழக்கம் எல்லாம் 'தெரியாத சிறிசு. குழந்தை தான்.

'குழந்தை இல்லேடி அவள். தேவி. நான் வணங்கும் மாதா நம் வீட்டில் ஒரு சிசு ஹத்தி ஏற்படக் கூடாது என்பதற்காக இந்தப் பெண் ரூபத்தில் வந்த ஆதி சக்தி. அவள் காலில் விழுந்து நமஸ்கரித்தால் கூடத் தோஷம் இல்லை' என்றார் சுவாமிநாதன் உணர்ச்சிப் பெருக்குடன்.

கௌதம் உடல் சிலிர்த்தது. சௌம்யா பரவசப்பட்டுப் போனாள்.

'அப்படியானால் சாப்பிட வாருங்களேன்.'

'இல்லை பாகீரதி. எந்தக் குற்றத்திற்கும் தண்டனை உண்டு. பூஜை அறை விளக்கைத் தணிக்காமல் போனது என் தப்பு. அறையை மூடாமல் வந்தது உன் தப்பு. நாம் இரண்டு பேரும் இன்று உபவாசம் இருப்போம். மற்றவர்கள் சாப்பிடட்டும்! என்றார் சுவாமிநாதன் முடிவாக.

சௌம்யா தன்னையறியாமல் கையெடுத்து அவர் இருந்த பக்கம் பார்த்துக் கும்பிட்டாள்.

**-'தலைவாழை' என்ற மூத்த தலைமுறைக் கதைகள் தொகுப்பிலிருந்து.**

**வெளியீடு**
**அன்னம் பி லிட்.,**
**2, சிவன் கோயில் தெற்குத் தெரு,**
**சிவகங்கை.**

**ஆப்பிளின் அருமை**

**ஆப்பிளை அடிக்கடி உண்பதினால் வலிப்பு நோய் குணமாகும்.**



# வாசகர் இதயம்

☆எங்கள் ஊர் பிர்ச்சினை, துணுக்குகள், சிறுகதை போன்ற புதுப்புதுப் பகுதிகளோடு, இரு பத்தேழு ஆண்டுகள் ஆயினும் இன்று பூத்த புதுமலர்போல் வெளி வருகிறது 'தமிழரசு'; வாழ்த்துகிறேன்.

**-குருசாமிராஜ்**
**தூசிபாளையம்**

☆அறிஞர் அண்ணாவின் சிறு கதை 'பலி' அருமையாக இருந் தது; அப்படிப்பட்ட கதைகள் அடிக்கடி இடம் பெறட்டும்.

**-டி. முருகேசன்**
**பச்சார்பாளையம், கோவை**

☆மாநகராட்சி பற்றிய பல விவரங்களை வெளியிட்ட தாங்கள் நகராட்சி, ஊராட்சித் தலைவர்கள், அவர்கள் செயல் பாடுகள் பற்றிய விவரங்களை வெளியிடலாமே?

**-அ. கந்தசாமி**
**திருப்பூர்**

☆'தமிழகத்தில் காந்தியாரும்' 'பட்டுக்கோட்டையாரின் பாட்டுத் திறம்' கட்டுரையும் மன நெகிழ்ச் சியை ஏற்படுத்தியது.

**-பாவலர் இராவணதாசன்**
**சென்னை**

☆'இலக்கியத்தில் சொல்லாடல்' பகுதியில் அந்தகக் கவி வீர ராகவ முதலியாரின் பாடலைக் கட்டுரையாளர் மிக அருமை யாக விளக்கியிருந்தார்.

**-சு. நஞ்சையன்**
**பாலசமுத்திரம்**

☆'கலைஞரின் உவமைகள்' என்ற கட்டுரையும், வள்ளலாரின் மானிட தர்மம் பற்றிய கட்டு ரையும் ரசிக்கும்படி இருந்தன; பாராட்டுக்கள்.

**-ப. அருணாசலசண்முகம்**
**வீரளூர் - தி.ச.மா.**

'பனித்துளிப் பார்வை'களில்

☆'பனித்துளிப் பார்வை'களில் இறையன்பைக் கண்டேன்.

**-ம.கா.முத்துவேல்**
**களப்பாள் - மன்னை**

☆இராவணன் வீரம், தந்தை பெரியார் மரணம், பெருஞ் சித்திரனாரின் வறுமை போன்ற வற்றைக் கலைஞர் உவமை களில் கண்டுகளித்தோம்; அண்ணாவுக்குப் பிறகு கலைஞரைத் தவிர அழகு தமிழ்நடை எழுத்தும் பேச்சும் யாருக்கு வரும்?

**-தி.பொ.சண்முகசுந்தரம்**
**திட்டக்குடி**

☆நேரமறிந்து தாங்கள் வெளி யிட்ட மழைக்கால நோய்கள் கட்டுரை சிறப்பாக இருந்தது.

**-வ. செயராமன்**
**ஆவணியாபுரம்**

☆கலைஞரின் எழுத்தோவியங் களைத் தொடர்ந்து வெளி யிடுங்கள்; வரவேற்கிறோம்.

**-எஸ். நாகராஜன்**
**மேலப்பாதி**

☆அமைச்சர் தமிழ்க்குடிமகன் கவிதை அற்புதம்; தொடர்ந்து எழுதச் செய்யுங்கள். இலக்கிய இதழாக விளங்கும் தமிழரசு தொண்டு தொடரட்டும்.

**-பி.சி. குருசந்தர்**
**தலைவாசல்**

# அயோடின் உப்பு

'உப்பு இல்லாத பண்டம் குப்பையிலே' என்பதைக் கொண்டே நம் உணவு முறைக்கு உப்பு எவ்வளவு அவசியம் என்று அறியலாம். முற்காலத்தில் உப்பு, சுவைக்காக மட்டும் சேர்க்கப்பட்டு வந்தது. தற்போது உப்பில் அயோடின் கலந்து அது ஒரு சத்துணவாக மாற்றப்பட்டுள்ளது.

மக்கள் மற்றும் கால்நடைகளின் உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாது தேவைப்படும் ஊட்டச்சத்துக்களில் ஒன்று அயோடின். இந்த அயோடின் பொதுவாக விளைபொருள்கள் மற்றும் தண்ணீர் மூலம் கிடைக்கும். ஆனால், நிலத்தில் அயோடின் பற்றாக்குறை இருப்பதால், ஒவ்வொரு நாளும் நமக்குத் தேவையான அயோடின் அது தரமுடியாது. இதனை ஈடுசெய்ய அயோடைஸ்டு உப்பை உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

சாதாரண உப்புடன் பொட்டாஷியம் அயோடேட் வடிவில் மிகச் சிறிதளவு அயோடின் கலந்ததுவே அயோடைஸ்டு உப்பு. இதில் சேர்க்கப்படும் இந்த இரசாயனப் பொருள் மிகமிகச் சிறிதளவே ஆகும். அதாவது, 10 இலட்சம் பங்கு உப்புக்கு 50 பங்கு இரசாயனப் பொருள். இதனால் உப்பின் நிறம் மணம், சுவை எதுவும் மாறாது.

அயோடின் பற்றாக்குறையால் பெரியவர்கள், குழந்தைகள், கர்ப்பிணிகள், கால்நடைகளுக்குப் பல தீமைகள் ஏற்படுகின்றது.

அயோடின் குறைவால் பெரியவர்களுக்குக் குரல்வளைச் சுரப்பி வீக்கம், சக்தி இல்லாமை, ஆற்றல் திறன் குறைவாயிருத்தல் போன்றவை ஏற்படுகின்றன.

கர்ப்பிணிப் பெண்களுக்குக் கருச்சிதைவு, குழந்தை இறந்து பிறத்தல், மனவளர்ச்சி குன்றிய அல்லது ஊனமுடன் குழந்தைகள் பிறத்தல், சிசு மரணம் ஆகியவை ஏற்படுகின்றன.

குழந்தைகளுக்குக் குறைந்த அறிவுத்திறன், பள்ளியில் குறைவான ஆற்றல், மனவளர்ச்சி குன்றியிருத்தல், உடல் வளர்ச்சி இல்லாமை அல்லது குறைவாயிருத்தல், காது கேட்பதிலும், பேசுவதிலும் குறைபாடுகள், சக்தி இல்லாமை ஏற்படுகிறது.

கால்நடைகளுக்கு ஏற்படும் அயோடின் குறைவால் பால், முட்டை, இறைச்சி மற்றும் கம்பளி உற்பத்தி குறைகின்றது.

அயோடின் சத்து குறைவினால் ஏற்படும் நோய்கள் இந்தியாவின் வட கிழக்கு மற்றும் வடஇந்தியாவின் பகுதியிலும், இமயமலையின் சாரல்களிலும் மற்றும் ஜம்மு காஷ்மீர் பகுதிகளிலும் அதிகமாக காணப்படுகிறது. ஆனால், தற்போது அயோடின் சத்து குறைவினால் ஏற்படும் நோய்கள் மகாராஷ்டிரம், குஜராத், மத்திய



பிரதேசம், ஆந்திரப்பிரதேசம், ஒரிசா, கர்நாடகம், கேரளா, தமிழ்நாடு, டெல்லி ஆகிய பகுதி களிலும் கண்டறியப்பட்டுள்ளன. இந்தியாவில் எல்லா மாநிலத் திலும் அயோடின் குறைவுள்ள பகுதிகள் புதிதாக ஒவ்வொரு நாளும் கண்டறியப்படுகின்றன.

ஒரு மனிதனுக்கு நாள் ஒன்றுக்கு சராசரியாக 150 மைக்ரோ கிராம் அயோடின் தேவைப்படுகிறது. வாழ்நாளில் ஒரு மனிதனுக்கு ஒரு தேக்க ரண்டிக்கும் குறைவான அளவே உள்ள அயோடின் தேவைப் படுகிறது. ஆனால் அயோடின் தேவை சிறிதளவே என்றாலும் அது தினமும் தேவைப்படுகிறது.

சில வகையான கடல் பாசி களைத் தவிர மற்ற உணவுகளில் அயோடின் சத்து அதிகமாய் காணப்படுவதில்லை. எல்லா வகை உணவுகளிலும் அயோடின் அது எந்த இடத்தில் வளருகிறதோ அந்த மண்ணில் இருந்தே பெற்றுக் கொள்கிறது. அப்படி வளரும் போது அந்த மண்ணில் போது மான அளவு அயோடின் இல்லை என்றால் அதில் கிடைக்கக்கூடிய உணவு வகையிலும் அநேகமாய் அயோடின் காணப்படுவதில்லை.

உணவில் அதிக அளவு அயோடின் கலந்திருந்தால் நமது உடல் நமக்குத் தேவையான அளவு அயோடினை மட்டுமே ஏற்றுக் கொண்டு அதிகப்படியாக உள்ள அயோடினை சிறுநீர் மூலமாக வெளியேற்றிவிடும்.

சமையலுக்கும் மற்றும் உணவின்போதும் சாதாரண உப்பைப் பயன்படுத்துவது போல் அயோடின் உப்பைப் பயன்படுத் தலாம். ஆனால் உப்பைப் பயன் படுத்துமுன் தண்ணீரில் கழுவக் கூடாது. அப்படி செய்தால் அதில் உள்ள அயோடின் சத்து தண்ணீரில் போய்விடும்.

அயோடின் உப்பைத்தொடர்ந்து திறந்தவெளியில் வைக்கக்கூடாது. சூரிய ஒளியும் காற்றிலுள்ள ஈரப் பசையும் அயோடின் சத்தைக் குறைத்துவிடும். எனவே, அயோடின் உப்பை பிளாஸ்டிக் கண்ணாடி, பீங்கான், மண் பாத்திரங்களில் மூடி சூரிய ஒளிபடாத இடத்தில் பாதுகாப்பாக வைக்கவேண்டும்.

இயற்கை உணவுப் பொருள்கள், தண்ணீரில் கிடைக்கக்கூடிய அயோடின் அளவுடன், அயோடின் உப்பைச் சேர்த்து அயோடின் பற்றாக்குறையினால் ஏற்படும் தீய விளைவுகளைத் தவிர்க்கலாம்.

அயோடின் பற்றாக்குறைவால் ஏற்படும் விளைவுகளை நீக்கும் நோக்குடன் தமிழ்நாடு அரசு உணவுக்கலப்படத் தடுப்புச் சட்டத்தின் கீழ் உட்கொள்ளும் தேவைக்காக அயோடின் தாது கலந்த உப்பின் விற்பனை- விநி யோகத்தை மாநிலம் முழுவதும் கட்டாயமாக்கியிருக்கிறது. உட் கொள்ளும் தேவைகளுக்காக உப்பைக் கொள்முதல் செய்து, சேமித்து வைத்து, விநியோகம் செய்யும் அனைவரும் இப்போது அயோடைஸ்டு உப்பு வர்த்த கத்தில் மட்டுமே ஈடுபட வேண்டும்.

இதனால் அயோடின் பற்றாக் குறைக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் உப்பு வியாபாரிகள் மிக முக்கியப் பங்கு வகிக்கிறார்கள்.

சாதாரண உப்பை, அயோ டைஸ்டு உப்பாக மாற்றுவதற்கு ஆகும் செலவு டன் ஒன்றுக்கு ரூ.50 மட்டுமே ஆகும். ஒரு கிலோவுக்கு சுமார் 5 காசு.

பொது நலம் கருதி, எந்த வொரு உணவுப் பொருளையும் போலவே, அயோடைஸ்டு உப்பும் சில தர அளவுகளைக் கொண்டி ருக்க வேண்டும். அதன்படி இல்லாத உப்பு வர்த்தகத்தில் ஈடுபடுவோர் கலப்படத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

எனவே, அயோடைஸ்டு உப்பைத் தயாரித்தும் உட் கொண்டும் அயோடின் பற்றாக் குறைவால் ஏற்படும் தீமைகளைக் களைவோம்.

-ஜி. பாஸ்கரன்

## சகாராவில் மரங்கள்!

மரம் வெட்டும் வேலைக்கான நேர்முகத் தேர்வு நடந்துகொண்டிருந்தது. ஒருவரிடம் உயர் அலுவலர் கேட்டார்:

''ஒரு நாளைக்கு உன்னால் எத்தனை மரம் வெட்ட முடியும்?''

''சுமார்... பத்து அல்லது பதினைஞ்சுங்க!''

''அடேயப்பா!... இதுக்கு முன்னே எங்காவது மரம் வெட்டின அனுபவம் உண்டா?''

''உண்டுங்க; சகாராவுல வெட்டிருக்கேன்!''

''சகாராங்கிறது பாலைவனமாச்சே!''

''நான் அப்பிடி வெட்டப் போயிதாங்க அது அப்பிடி ஆச்சு!''



# கம்பனும் பாரதியும்

-டாக்டர் சாரதா நம்பி ஆரூரன்

**'பாட்டுக்கொரு புலவன்**
**பாரதியடா அவன்**
**பாட்டைக்கேட்டுக்**
**கிறுகிறுத்துப் போனேனடா'**

-என்று பாடினார் கவிமணி. ஒரு தமிழனை இன்னொரு தமிழன் பராட்டமாட்டான்! அதிலும் ஒரு கவிஞன் இன்னொரு கவிஞனைப் பாராட்டுதல் என்பதுமிக அபூர்வ மான ஒன்றே மகாகவி சுப்ரமணிய பாரதியைப் பாராட்டாத புல்வர்கள் இல்லை எனலாம்.

**'பாலும் சோறும் வீட்டுக்குறுதி**
**பாரதி பாட்டு நாட்டுக்குறுதி!**

-என்றார் சுத்தானந்த பாரதி!

பாரதியால் பாடப்பட்டவர்கள் மூவர். கம்பன், வள்ளுவன், உலகமகா கவிஞர்கள் சிறந்த வர்கள் என்று பாடினார் பாரதியார்.

உலகிலுள்ள எல்லா மக்களுக் கும் எக்காலத்துக்கும் பொருந்தும் அறநூலாக விளங்குவது குறள், சமண சமயக் கொள்கைகளை விளக்கும் ஒரு நூலாக இருப் பினும் சமயப் பொறை உடைய நூலாக சிலப்பதிகாரம் விளங்கு கிறது. ஆனால் ஒரு புலவன் அல்லது கவிஞன் என்ற நிலையில் நின்று கம்பன் பாடிய காவியம் பாரதியாரை அதிகமாகக் கவர்ந் திருக்கலாம்.

**"கல்வி சிறந்த தமிழ்நாடு புகழ்க்**
**கம்பன் பிறந்த தமிழ்நாடு நல்ல**

போல் வேறொரு இடத்திலும் சேர்த்துக் கூறுகிறார்!

**யாமறிந்த புலவரிலே**
**கம்பனைப் போல் வள்ளுவர்**
**போல்**
**இளங்கோவைப் போல்**
**பூமிதனில் யாங்கணுமே**
**பிறந்ததில்லை உண்மை,**
**வெறும்**
**புகழ்ச்சி யில்லை!**
**தம்முடைய சுயசரிதையில்,**
**"கம்பன் என்றொருமானிடன்**
**வாழ்ந்ததும்"**

-என்று காட்டுகிறார்!

கம்பன் காப்பியத்தில் மூழ்கித் திளைத்த எவரும் கம்பனுடைய சொல்லாற்றலையும் அளத் தலாகா அறிவுத் திறனையும், வியக்காமல் இருக்க முடியாது! செயற்கரிய செய்த கம்பன் தன் ஒப்பற்ற படைப்பால் மனித சமு தாயத்தின் மாண்பினை உயர்த்திய தால் பாரதி அடைந்த பெருமை யும், பெருமிதமும் 'மானிடன்' என்ற ஒரே சொல்லால் உணர்த் தப் படுகின்றன.

இளங்கோ இம்மூவரைப்போல உலகில் எங்குமே கவிஞர்கள் பிறந்ததில்லை, இதை நான் உண்மையாகச் சொல்கிறேன் வெறும் புகழ்ச்சிக்காகச் சொல்ல வில்லை என்கிறார் பாரதியார்.

**"யாமறிந்த புலவரிலே**
**கம்பனைப் போல்**
**வள்ளுவன்போல்**
**இளங்கோவைப்போல்**
**பூமிதனில் யாங்கணுமே**
**பிறந்ததில்லை"**
**உண்மை வெறும்**
**புகழ்ச்சியில்லை"**

இப்பாட்டில் உள்ள கம்பன், வள்ளுவன், இளங்கோ மூவருமே

**பல்விதமாயின சாத்திரத்தின்-**
**மணம்**
**பாரெங்கும் வீசும் தமிழ்நாடு**
**வள்ளுவன் தன்னை**
**உலகினுக்கே தந்து**
**வான்புகழ் கொண்ட**
**தமிழ்நாடு நெஞ்சை**
**அள்ளும் சிலப்பதி**
**காரமென்றோர் மணி**
**யாரம் படைத்த தமிழ்நாடு"**

-என்ற கம்பனை வைத்துப் பாடுகிறார் பாரதி.

கம்பன், வள்ளுவன், இளங்கோ ஆகிய மூவரையும் இவ்விரு இடங்களில் சேர்த்துக் கூறியது

பாரதியார் பாடல்களையும், கம்பன் பாடல்களையும் படிப் போருக்கு இவ்விரு மகாகவிஞர் களின் மனப்போக்கும் பெரும் பாலான இடங்களில் ஒத்துப் போகக் காணலாம்.

**காதல் செய்வீர் ஜெகத்தீரே!**

பாரதியார், கம்பன் இரு

வருமே காதல்மணத்தை ஆதரிக்கின்றனர்.

**காதலர் இருவர்கருத்தொருமித்து**
**ஆதரவு பட்டதே இல்லற**
**வாழ்க்கை'**

என்பார் தமிழ் மூதாட்டி அவ்வை! இக்காதல் வழிபட்ட கற்பு வாழ்வே பாரதியும் கம்பனும் காட்டுவது.

**"காதலினால் மானுடர்க்குக்**
**கலவி யுண்டாம்;**
**கலவியிலே மானுடர்க்குக்**
**கவலை தீரும்;**
**காதலினால் மானுடர்க்குக்**
**கவிதை யுண்டாம்;**
**கானமுண்டாம் சிற்பமுதற்**
**கலைக ளுண்டாம்;**
**ஆதலினால் காதல்செய்வீர்;**
**உலகத் தீரே**
**அதன்றோ இவ்வுலகத்**
**தலைமை யின்பம்;**
**காதலினால் சாகாம லிருத்தல்**
**கூடும்;**
**கவலைபோம், அதனாலே**
**மரணம் பொய்யாம்"**

-என்று காதலைப் போற்றிப் பாடுகிறார் பாரதியார்!



**"காதல் காதல் காதல்**
**காதல் போயிற் காதல் போயிற்**
**சாதல் சாதல் சாதல்"**

-என்று காதலற்ற வாழ்வைக் காட்டிலும் சாதல் என்பது இனிமையானது என்று காதலின் சிறப்பை உயர்த்திக் காட்டுகின்றார் பாரதியார்!

இக்காதலின் அருமையை உணர்ந்தே இராமன், சீதை திருமணத்தைக் காதல் வழிப்பட்ட திருமணமாகக் காட்டுவான் கம்பன்!

வான்மீகி, சனகன் வைத்திருந்த வில்லை முறித்த பின்னரே இராமன் சீதையைக் கண்டதாகவும், திருமணம் புரிந்து கொண்டதாகவும் தன் இராமாயணத்தில் காட்டியுள்ளார். ஆனால் கம்பனோ தம் காப்பியத்தை மரபுநிலை வழுவாமல் இயற்ற வேண்டும் என எண்ணினான். அதனால் வில்லை முறிப்பதற்கு முன்னமே இராமன் சீதையைச் சந்திக்கும் வண்ணம் செய்கிறான்!

**'கற்பெனப்படுவது களவின்**
**வழித்தே'**

என்று தொல்காப்பியர் கூறும் நெறியைப் பின்பற்றிக் கூறினான்!

கன்னிமாடத்தில் நிற்கிறாள் சீதை! இலக்குவனும் முனிவரும் தொடர இராமன் தெருவில் நடந்து கொண்டிருக்கிறான். காப்பியத் தலைமாந்தர் இருவரும் சந்திக்கின்றனர் எங்ஙனம்?

**எண்ணஅரு நலத்தினாள்**
**இனையள் நின்றுவழி,**
**கண்ணொடு கண்இணை**
**கல்வி, ஒன்றைஒன்று**
**உண்ணவும், நிலைபெறாத**
**உணர்வும் ஒன்றிட,**
**அண்ணலும் நோக்கினான்**
**அவளும் நோக்கினாள்**
**(மிதிலைக்காட்சி.35)**

இப்பாடல் தமிழ் இலக்கணத்தில் கூறப்படுகின்ற 'காட்சி' என்ற துறையின் பாற்படும். Love at first sight என்று ஷேக்ஸ்பியரும் 'கண்டதும் காதல்' பற்றிக் கூறுவார். மொழியும், நாடும் வேறொன்றாலும் மனித உணர்வுகள் ஒன்று தானே.

**"கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல"**

-என்று இக்'காட்சி'யைப் பற்றி வள்ளுவரும் குறிப்பிடுவார்.

**ஆடவர் கற்பு**

பொதுவாக மகளிரின் கற்பொழுக்கத்தைப் பற்றித்தான் இலக்கியங்கள் பாராட்டுவது வழக்கம்! ஆனால் கம்பனும் பாரதியும் ஆடவர் கற்பையும் வலியுறுத்துவதைக் காணலாம்!

**"கற்பு நிலையென்று சொல்லவந்தார், இரு கட்சிக்கும் அது பொதுவில் வைப்போம்"**

-என்று ஆடவருக்கும் பெண்களுக்கும் கற்பு எனப்படுவது ஒரே நிலையில் வைக்கப்பட வேண்டும், பேசப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறார் பாரதியார்.

கம்பனது காவிய நாயகனிடம் இவ்வுயர்ந்த பண்பினைக் காண்கிறோம்.

**"இந்த இப்பிறவிக்கு இருமாதரை சிந்தையாலும் தொடேன்!**

-என்ற உறுதியுடன் வாழ்ந்தவன் இராமன்.

'குலத்து மாதருக்குக் கற்பு இயல்பாகுமாம்' என்பார் பாரதி. இராமன் ஆணையால் நெருப்பிடைப் புகுகின்றாள் சீதை. சீதையின் கற்பாகிய தீ, அக்கினிக் கடவுளின் வலிமையையும் அடக்கி விட்டதாம்.

**'தீந்ததவ் வெரியவள் கற்பின் தீயினால்**

என்கிறான் கம்பன்.

**மொழிப்பற்று**

பாரதியின் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் கம்பனது நாட்டுப் பற்றுடனும், மொழிப் பற்றுடனும் ஒத்து விளக்கக் காணலாம்.

**'தேமதுரத் தமிழோசை உலகெங்கும் பரவும் வகை செய்தல் வேண்டும்'**

என்று விரும்பினார் பாரதியார்.

**'சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!**

-என்று கட்டளையிட்டார்.

**'சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் யாவும்கொணர்ந் திங்கு சேர்ப்பீர்!**

என்று வேண்டினார்.

அதுமட்டுமல்ல, தமிழின் சுவை கண்டவர் தெய்வ வாழ்க்கையையே வாழலாம் என்றும் உறுதியாக் கூறுகின்றார்!

**"தெள்ளூற்ற தமிழமுதின் சுவை கண்டார் சிங்கமரர் சிறப்புக் கண்டார்"**

என்கிறார்!

அகத்தியரைப் பற்றிக் கூறுமிடத்துக் கம்பனின் தமிழ்மொழிப் பற்று புலனாகும் **'என்றுமுள தென்தமிழை இசை கொண்டான்'** என்கிறான். அகத்தியர் வட நாட்டிலிருந்து தென்நாட்டிற்கு வந்து தமிழ் பயின்று, தமிழால் புகழ் கொண்டார் என்ற கருத்தைக் கூறும்போது இங்ஙனம் கம்பன் கூறுகின்றான்.

என்றுமுள தமிழ், தென் மொழி, இசை கொண்ட தமிழ் இவ்வாறெல்லாம் உள்ள தமிழைக் கற்று அகத்தியர் புகழ்கொண்டார் என்று கூறுவது கம்பனின் தாய் மொழிப் பற்றை விளக்கும்.

**நாட்டுப் பற்று**

பாரதியாரின் நாட்டுப்பற்று உலகறிந்தது.

**'பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு"** எனவும்,

**"பாரத தேசமென்று பெயர் சொல்லுவார் மிடி பயங்கொல்லுவார் துயர்ப்பகை வெல்லுவார்!**

என்று பாரத நாட்டைப் புகழ்வார்.

**'செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன்வந்துபாயுது காதினிலே எங்கள் தந்தையர் நாடென்று பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே,**

என்று தமிழ்நாட்டையும் பாடினார் பாரதியார்.

கம்பராமாயணத்தின் நாட்டுப் படலம் முழுவதும் கம்பனின் நாட்டுப்பற்றை விளக்கும் பாடலாகவே அமைந்துள்ளது எனலாம்!

**'காவிரி நாடன்ன கழனி நாடு'**

என்று கோசல நாட்டை ஒத்து கழனிகளை உடைய கோசல நாடு என்று கோசல நாட்டைச் சோழ நாடாகவே சிறப்பித்துள்ளான்.

**'வண்மை இல்லையோர் வறுமை இன்மையால் திண்மை இல்லைஓர் செறுநர் இன்மையால்**



''ஏன் கொக்கு ஒத்தக் கால்ல நிக்கிது தெரியுமா?''

''இன்னொரு காலையும் மடக்கினா கீழே விழுந்துடுவோம்கிற பயத்தாலதான்!''

**உண்மை இல்லைபொய் உரை**
**இல்லாமையால்**
**வெண்மை இல்லைபல**
**கேள்வி மேவலால்"**

-என்ற பாட்டில் வறுமையற்ற, வீரமிக்க, வாய்மையும் கல்வி ஞானமும் நிறைந்த கோசல நாட்டை காந்தியடிகள் கனவு கண்ட இராம இராஜ்யத்தைக் காண்கிறோம். பாரதியார் காண விரும்பிய சுதந்திர இந்தியாவும் இத்தகையதே.

**உயிரினம் அனைத்தும் ஒன்றே**

உயிரினம் அனைத்தும் ஒன்றென உணரும் தன்மையைப் பாரதியிடமும் கம்பனிடமும் கர்ண்கிறோம். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பார் வள்ளுவப் பெருந்தகை கடவுளின் அவதாரம் என்று சொல்லத்தக்க இராமனும், வேடுவர் குலத்தில் பிறந்த குகனும், குரங்கினத்திற்கு பிறந்த சுக்கிரீவனும், அரக்கர் குலத்தில் வீடணனும், பறவை இனத்துச் சடாயுவும் உடன்பிறந்தவர்களாகச் சகோதர உணர்வுடன் கம்பனால் மதிக்கப்படுகின்றனர்.

**"துன்புஉளதுஎனின் அன்றோ**
**சுகம்உளது? அதுஅன்றிப்**
**பின்பு உளது "இடை, மன்னும்**
**பிரிவு உளது" என, உன்னேல்**
**முன்பு உளெம், ஒரு நால்வேம்**
**முடிவுஉளது எனஉன்னா!**
**அன்பு உள, இனி, நாம் ஓர்**
**ஐவர்கள் உளர் ஆனோம்"**

-என்று கூறி இராமன் குகனை உடன்பிறப்பாக ஏற்கிறான்.

**"குகனோடு ஐவர்**
**ஆனோம்முன்பு பின்குன்று**
**சூழ்வான்**
**மகனோடும் அறுவர் ஆனோம்**
**எம்முழை அன்பின் வந்த**
**அகன் அமர் காதல் ஐய!**
**நின்னொரும் எழுவர்**
**ஆனோம்.**

**தமிழின் தனித்தன்மை**

**நீண்டநாள் அல்சர் நோயில் அவதிப்படுபவர்கள் முப்பது நாள் இட்லி, புட்டு, இடியாப் பத்தைத் தயிர் போட்டுப் பிசைந்து சாப்பிட்டுவந்தால் அல்சரா? அது எங்கே என்பார்கள்.**

**என்று வீடனைத் தழுவிக் கொள்கிறான் இராமன்!**

இவ்வுலகில் மனிதரெல்லோரும் உடன்பிறந்தவர்களைப் போன்றவர்கள் என்ற உலக சகோதர அன்பைப் பாரதியிடமும் காண்கிறோம்!

**"காக்கை குருவி எங்கள்**
**ஜாதிநீள்**
**கடலும் மலையும் எங்கள்**
**கூட்டம்**
**நோக்கும். திசையெலாம்**
**நாமன்றி வேறில்லை**
**நோக்கநோக்கக் களியாட்டம்"**

என்று எல்லா உயிர்களையும் ஒரே சாதியாகக் காண்கிறார்.

அதுமட்டுமா? தன் சீடனை நோக்கிக் கூறுகிறார்.

**'கேளப்பா, சீடனே! கழுதை**
**யொன்றைக்**
**கீழான பன்றியினைத்**
**தேளைக் கண்டு**
**தாளைப் பார்த்திருக்கரமும்**
**சிரமேற்கூப்பிச்**
**சங்கர சங்கர என்றுபணிதல்**
**வேண்டும்!**

என்கிறார். "எல்லா உயிரினும் நானே இருக்கிறேன்" என்று கீதையில் கண்ணன் கூறியதை வாழ்வியல் நெறியாக வாழ்ந்து காட்டியவர் மகாகவி பாரதி.

**கற்பனையும் நடைமுறையும்**

கம்பனுக்கும், பாரதிக்கும் இடையில் நூலிழை போல் அமைந்துள்ள வேறுபாடும் உண்டு!

உயர்வு நவிற்சியாக, அமைந்துள்ள பல கற்பனைகளைக் கம்பனில் காணலாம். பாரதியார் பாடல்களில் அவ்வாறு இல்லை. ஏனென்றால் கம்பன் படைத்தது காவியம்! பாரதி பாடியது தேசீயம்!

**"சேலுண்ட வொண்கணாரிற்**
**திரிகின்ற செங்காலன்னம்**
**மாலுண்ட நளினப்பள்ளி**
**வளர்த்திய மழலைப்பிள்ளை**
**காலுண்ட சேற்றுமேதி**
**கன்றுள்ளிக் கனைப்பதுச்**
**சோர்ந்த**
**பாலுண்ட துயிலப் பச்சைத்**
**தேரை தாலாட்டும் பண்ணை**
**-என்று பாடுவான் கம்பன்.**

இது போன்ற கம்பனின் கற்பனைகள் அக்கால இலக்கியப் போக்கை ஒட்டியனவேயன்றி வேறன்று! பாரதியாரின் பாடல்கள் கற்பனை நயத்துக்காகப் பாடப் பட்டதைவிட அவை எழுப்பிய சுதந்திர வேகத்துக்காகவே பாராட்டப்பட்டன!

கவிச்சக்கரவர்த்தி கம்பன் காப்பிய உலகின் நாயகன் பாட்டுக்கொரு புலவன் மகாகவி பாரதி தேசியம் வளர்த்த தமிழ்ப்பாடல்களின் நாயகன், கம்பன் கவிதை உணர்ச்சியைத் தூண்டினான் பாரதியார் சுதந்திரப் பயிரை வளர்த்தார். காலத்தால் மாறுபட்டாலும் கருத்தொருமித்த கவிஞர்களாகவே இவ்விருவரையும் காண்கிறோம்.



# நூல்நயம்

## தூறலும் சாரலும்

**ஆசிரியர் :**
கவிஞர் கா. வேழவேந்தன்

**வெளியிட்டோர் :**
வேந்தர் பதிப்பகம்
103, டாக்டர்
இராதாகிருட்டினன் சாலை,
மயிலாப்பூர்,
சென்னை600 004.

பக்கம்: 144 விலை: ரூ.25

**மா**ண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் இதய உரையோடு கூடிய கவிதை நூல் இது. இந்நூலில் 46 கவிதைகள் நறுக்கி வைத்த கரும்புத் துண்டுகளாகச் சிதறிக் கிடக்கின்றன. கவிஞர் அவர்களின் இந்நூலில் தமிழ் மணக்கின்றது.

**வெளியிட்டோர்:**
சங்கீதா பதிப்பகம்,
14/2 பீட்டர்ஸ் காலனி,
இராயப்பேட்டை,
சென்னை600 014.)

## கிராம மூலிகைகள்

**ஆசிரியர்:**
புலவர் நா. பசும்பொற்கிழார்

**வெளியிட்டோர்:**
காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை - 625 020.

பக்கம்:28 விலை: ரூ.5

**மூ**ல நோயை நீக்குவதிலிருந்து, மறதியைப் போக்குவது வரை, 31 கிராமப்புற மூலிகைகள் எவ்வாறெல்லாம் உதவுகின்றன; எளிய முறை மருந்தாகின்றன என்றெல்லாம் உரிய பக்குவத்தோடு இந்த நூலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## செந்நீரோவியம்

**ஆசிரியர்:**
கவிஞர் பண்ணன்

**வெளியிட்டோர்:**
எல் 25/3, 26வது
குறுக்குத் தெரு,
பெசன்ட் நகர்,
சென்னை - 600 090.

பக்கம்:418 விலை: ரூ.95

**பை**ந்தமிழ்ப் பாயிரத்தில் தொடங்கி, 5 காண்டங்களைக் கொண்டதாக, அரிய தமிழ்க் கவிதைகளால் இந்நூலை எழிலுற உருவாக்கியுள்ளார் கவிஞர் பண்ணன். பல வகை யாப்புக் கவிதைகளோடு கூடிய காப்பியம் என்றபோதிலும், கதையினை நடத்திச் செல்லும் பாங்கு நமக்கு வரலாற்றுப் புதினம் ஒன்றைப் படித்த மனநிறைவை உண்டாக்குகின்றது.

## அமுதமொழிகள் ஆயிரம்

ஆசிரியர்:
வேலூர் ம. நாராயணன்

வெளியிட்டோர்:
நிறைவாணன் பதிப்பகம்,
3, பெரியார் வீதி,
பாவேந்தர் நகர்,
வேலூர் - 9
வ.ஆ. அம்பேத்கர்
மாவட்டம்

பக்கம்: 119 விலை: ரூ. 32

**'அ**ன்பு' முதல் 'வெற்றி' வரையான பல தலைப்புகளின் கீழே, உலகில் வழங்கப்படும் பொன்மொழிகளையெல்லாம் வகைப்படுத்தித் தொகுத்துத் தந்திருக்கிறார் நூலாசிரியர். தமிழறிஞர்கள் உதிர்த்தவை மட்டுமன்றி, பல மொழி அறிஞர்கள் உதிர்த்த முத்துக்களும் இதில் ஒளி வீசுகின்றன.

## மலரும் மணமும்

ஆசிரியர்: வேலூர் ம. நாராயணன்

வெளியிட்டோர்: மேலே உள்ள
அதே பதிப்பகம்

பக்கம்: 120 விலை: ரூ.32

**ஆ**று இலக்கியக் கட்டுரைகளும், மூன்று தன்னிலை அனுபவக் கட்டுரைகளும் உடைய இந்நூல், ஆசிரியரின் இலக்கிய அறிவின் நிழலாகத் திகழ்கிறது. பாவேந்தர், பாவாணர், கம்பதாசன் போன்ற நம் காலத் தமிழறிஞர்களும் முற்காலத்தவரும் தொடப்பட்டிருக்கிறார்கள்.

## பொற்குவியல் தொகுதி - 2

ஆசிரியர்:
பாவலர் வைரிதரளம்

வெளியிட்டோர்:
முத்தமிழ் இலக்கிய மன்றம்
அம்மையப்பட்டு
வந்தவாசி - 604 408

பக்கம்: 88 விலை: ரூ.5

**ப**ல்வேறு தலைப்புகளில், பல்வேறு மொழிப் பேரறிஞர்களின் பொன்மொழிகள் இந்த நூலில் தரப்பட்டிருக்கின்றன. தமிழ் இலக்கியத்தின் பொன்னடிகளும் ஆங்காங்கே பொலிவுறத் திகழ்கின்றன.

**-இந்திரன்**



# அறிவியல் துளிகள்

## அட! கொசுவா?

மழைக்காலங்களில் குண்டு குழிகளில் எல்லாம் தண்ணீர் தேங்கி, சுற்றுப்புறச் சுழலுக்குக் கேடு விளைவிக்கும். தேங்கிய தண்ணீரில் கொசுக்கள் முட்டையிட்டு, விரைவாகப் பரவி பல விதமான வியாதிகளை உருவாக்குகின்றன. கொசுக்களில் மட்டும் 25 ஆயிரம் வகைகள் இருப்பதாக ஒரு ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. இக்கொசுக்களில் அனோபலிஸ் என்ற கொசு இனம் மலேரியா காய்ச்சல் உருவாவதற்குக் காரணமாய் இருக்கிறது. க்யூலக்ஸ் வாடிகன்ஸ் என்ற கொசுக்கள் யானைக்கால் நோயை உண்டாக்குகின்றன. க்யூலக்ஸ் டிரைட்டினியோரிங்ஸ் என்ற கொசுக்கள் பன்றிகளின் இரத்தத்தை உறிஞ்சி, குழந்தைகளின் உடலுக்குள் புகுந்து, மூளைக்காய்ச்சலை உண்டாக்குகின்றன. பொதுவாகக் கொசுக்களின் ஆயுள் காலம் மூன்று ஆண்டுகள் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இத்தகைய தீங்கு விளைவிக்கின்ற கொசுக்களைத் தண்ணீர் தேங்கி உள்ள குட்டைகளில் மண்ணெண்ணெயைத் தெளிப்பதன்மூலம் ஒழிக்கலாம்.

## பொதி சுமக்கும் கழுதை

சாதாரணமாகக் காகிதங்களைத் தின்னும் நாட்டுப்புறக் கழுதைகள் ஒரே மூச்சில் 3 லிட்டர் வரை தண்ணீர் குடிக்குமாம். அவை 7 நாட்கள் எந்தவித உணவுமில்லாமல் உயிர் வாழ்வதற்கான தெம்பு கொண்டதாம். ஆரோக்கியமான கழுதைகள் சுமார் 45 கிலோ வரை பொதி சுமக்கும் என்கிறார்கள்.

## தக்காளி

தக்காளியில் யூரிக் அமிலம் அதிக அளவில் உள்ளது. இது நீர்ப்பையிலுள்ள கற்களை கரைக்க வல்லதாம்.

## பல்லி

வீடுகளில் உலாவும் பல்லியிடம் ஒரு சிறப்புத் தன்மை உண்டு. எதிரி அதன் வாலைக் கவ்வினால் வால் துண்டுபடும். பிறகு, அதே இடத்தில் புதிய வால் உற்பத்தியாகிவிடும். பெரும்பாலான பல்லிகள் விஷமற்றவை என்றாலும் அமெரிக்கப் பாலை வனத்தில் உள்ள ஒரு பல்லி இனமும், மெக்ஸிகோ நாட்டில் உள்ள ஒரு பல்லிவகையும் விஷமுள்ளதாம். பல்லிகளில் 2,500 வகைகள் உண்டாம்.

## ரோபோ

ரோபோ என்ற சொல் 'ரோபோட்டா' என்ற செக்கோஸ்லோவாக்கிய மொழியிலிருந்து வந்தது. ரோபோ என்றால் வேலை என்று பொருள். மனிதனையும், மனிதனின் வேலைகளையும் காப்பிடிக்கும் ஒரு இயந்திரம்தான் ரோபோட் ஆகும். ரோபோக்களை உபயோகித்து மனிதனால் செய்ய முடியாத பல வேலைகளைச் செய்யலாம். ரோபோக்கள், சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னால் கனடாவில் இருந்து புறப்பட்ட கனிஷ்கா என்ற விமானம் நடுக்கடலில் விழுந்தபோது அந்த விமானத்தின் கறுப்புப் பெட்டியைக் கடலில் மூழ்கி, தேடி எடுத்தது. ரோபோவை விளையாட்டு, பந்தயம் போன்ற பொழுதுபோக்கிற்கும் பயன்படுத்துகிறார்கள்.

## கால்களும், நோய்களும்

கால்களின் மூலம் 60 வகையான வியாதிகள் நம் உடலுக்குள் நுழையக்கூடும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளார்கள். கூடுமானவரை பாத அணிகள் அணிந்தும், கால்களைச் சுத்தமாகவும் வைத்திருப்பதன்மூலமும் நாம் வியாதிகளிலிருந்து தப்பிக்கலாம்.

## வேகம்

நத்தை ஒரு கிலோ மீட்டர் தூரத்தை அடைய 24 மணி நேரத்தை எடுத்துக்கொள்கிறது. ஆமைகள் 100 மீட்டர் தொலைவைக் கடக்க 22 நிமிடங்கள் ஆகும். விலங்குகளிலேயே சிறுத்தைப் புலிகள்தான் வேகமாக ஓடக்கூடியவை. அவை மணிக்கு 100 கி.மீ. வேகத்தில் ஓடும்; ஆனால், ஒரு சில மீட்டர்கள் ஓடியதுமே அது களைத்து விடுகின்றன.





**அ**ரேபியா வளைகுடாவின் கரையோரச் சேற்றில் கிடக்கும் கெளுத்தி மீன்களில் ஒருவிதக் களிம்பு (Secretion) காணப்படு கிறது. 60க்கும் மேலான புரதங்கள் அதில் அடங்கியிருக்கின்றனவாம். ஆறாத ரணங்களையும் ஆற்றும் சக்தி அந்தக் களிம்பிற்கு இருப்ப தாகக் குவைத் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக் கிறார்கள்!



**மி**ன்னல் தாக்குமிடத்தையும், அது எந்தக் கணக்கில் தாக்கு கிறது என்பதையும் மிகச் சரி யாகக் கண்டுபிடிக்க, அமெரிக்க வானிலைத் துறை அதிகாரிகள் விண்வெளியுகக் கம்ப்யூட்டர் கருவிகளைப் பயன்படுத்துகிறார்கள். காடுகளில் மின்னல் தாக்கிக் காட்டுத் தீ மூளுவதைத் தவிர்க்க இந்த முறை பயன்படுகிறதாம்!



**அ**ட்டை என்றாலே இரத் தத்தை உறிஞ்சும் என்றுதான் நமக்குத் தெரியும். ஆனால் அதி லிருந்து சுரக்கும் பிசுபிசுப்பான திரவம், கிளகோமா (Glaucoma) என்கிற கண் நோயை நீக்கும் மருந்தாகப் பயன்படுகிறது என் கிறார்கள் பிரிட்டனில் அட்டைப் பண்ணையே வைத்து நடத்தும் பயோபார்ம் நிறுவனத்தார்!

# சொல்லுங்கள் பார்க்கலாம்?

– ராஜா

1. இளமையில் கருமை
முதுமையில் வெண்மை!
- அது என்ன?

2. சின்னச் சின்னப் பெட்டிக்குள்ளே
சேதியெல்லாம் கண்ணுக்குள்ளே!
- அது என்ன?

3. அடித்தால் வலிக்கும்
கடித்தால் இனிக்கும்!
- அது என்ன?

4. ஒட்டம் நின்றால்
ஆட்டம் போச்சு!
- அது என்ன?

5. கலகல சிரிப்புடன் அழைப்பான்
காதுக்குள் கதைகளை நுழைப்பான்!
- அது என்ன?

6. நின்றால் நிற்பான்
நடந்தால் நடப்பான்
படுத்தால் படுப்பான்!
- அவன் யார்?

7. சின்னப்பெட்டி நல்ல பெட்டி
சேதி சொல்லும் வெல்லக்கட்டி!
- அது என்ன?

விடைகள்:

1. தலைமுடி 2. தொலைக்காட்சி 3. கரும்பு 4. இரத்த ஓட்டம் 5. தொலைபேசி 6. நிழல் 7. வானொலி.

# மாம்பழம் ஒரு மாமருந்து

கனிகளில் சிறந்தது முக்கனி என்பது நமது முன்னோர்களின் முதுமொழி. மா, பலா, வாழை என்று முக்கனிகளில் முதல் இடத்தை மாம்பழத்திற்கு அளித்துள்ளனர் நமது முன்னோர். பல கவிஞர்கள் மாம் பழத்தையும் அதற்குரிய உயர்ந்த இடத் தையும் புகழ்ந்து பாடி இருக்கிறார்கள். வால்மீகியும் காளிதாஸனும் மாம்பழத் தின் ரசிகர்களாகவும் அவற்றின் மீது மிகுந்த விருப்பம் உடையவர்களாகவும் இருந்தனர்.

மாம்பழத்தில் பல்வேறு ரகங்கள் உள்ளன. இந்தியாவில் 14,000 ரகங்கள் அல்லது இனங்கள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை, தரத்திலும், தன்மையிலும், பெயரிலும் ஒன்றுக்கு ஒன்று வேறுபட்டவையாக வும் மாறுபட்டவையாகவும் இருக்கின் றன. மாம்பழம் ஒரு இனிமையான சுவையுள்ள பழமாகும். எல்லா வகை யான மனிதர்களையும் அது தனது இனிய சுவையால் கவர்ந்துள்ளது.

மாம்பழத்தின் தோலில் கரோட்டின் சத்து மிகுந்த அளவில் இருக்கின்றது. ஆகவே, மாம்பழத்தை அதன் தோலு டன் சாப்பிட வேண்டும். மாம்பழத்தில்,
86.1 சதவீதம் கார்போஹைடிரேட்டும்,
11 சதவீதம் நார்சத்தும்,
0.1 கால்ஸியமும்,
0.3 சதவீதம் இரும்புச் சத்தும்,
0.3 சதவீதம் பாஸ்பரசும்,
மற்றும் வைட்டமின் சத்துக்களும், புரதச்சத்தும், தாதுப்பொருட்களும் இருக்கின்றன.

**மாம்பழத்தின் ஒவ்வொரு 100 கிராமிலும்,**

4,800 யூனின் கரோட்டின்,
40 மில்லி கிராம் வைட்டமின்-சி
50 மில்லி கிராம் ரிப்போபிளேவின் என்ற "பி" இனத்தைச் சேர்ந்த வைட்டமினும் மற்றும்
13 மில்லி கிராம் வைட்டமின்-டியும் அடங்கியுள்ளன. நூறு கிராம் மாம்பழத்தில் 50 கிராம் கலோரி சத்து உள்ளது.

பப்பாளி மற்றும் வாழைப் பழத்தை விட மாம்பழத்தில் அதிக அளவில் சத்துக்கள் இருக்கின்றன. ஒருவர் உடல் களைப்பாகவும் மனச்சோர்வாக வும் இருக்கும்போது மாம்பழம் சாப்பிடுவது நல்லதாகும். மாம்பழம் உடனடியாக உடல் அசதியைப் போக்கி புத்துணர்ச்சியை அளிக்கிறது.

மாம்பழம் உடல் நலத்தை மட்டு மல்ல ரத்தத்தை உற்பத்தி செய்வ திலும் மிகுந்த பயனை அளிக்கிறது. பசி இல்லாதவர்களும்கூட மாம்பழம் சாப்பிடலாம். உணவு செரிமானத்துக்கு உதவும் அமிலங்களை மாம்பழம் மீண்டும் வயிற்றில் சுரக்கச் செய்கிறது. மாம்பழம் வயிற்றை இளகச் செய்து ஜீரண சக்தியை அதிகரித்து - மலச்சிக்கலைப் போக்குகிறது. வயிறு மற்றும் குடல் பகுதிகளில் உண்டாகும் வாய்வுத் தொல்லைகளைப் போக்கு கிறது.

புற்றுநோயைத் தடுப்பதற்கும் குணப்படுத்துவதற்கும் மாம்பழம் பெரும் உதவியாக இருக்கிறது. வேறு உணவு எதுவும் சாப்பிடாமல் இருந்து மாம்பழச் சாறு மட்டும் சாப்பிட்டு வந்தால் அனிமியா, வெளிறிப் போதல், காட்ரேக்ட் மற்றும் சாதாரண ஜலதோஷம் போன்றவை குணமாகும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மாதவிலக்குக் காலங்களில் அதிக ரத்தப் போக்கு ஏற்பட்டால் - முழுமையான ஓய்வோடு மாம்பழச் சாறு அருந்தி னால் - ரத்தப்போக்கு குறையும்.

சத்துணவுப் பற்றாக்குறையே மனநோய்களுக்கு அடிப்படை காரணம் என்று ஆராய்ச்சிகள் நிரூபித்து உள் ளன. ஆகவே, அத்தகைய நோயாளி களுக்கு அதிகமான அளவில் மாம்பழ மும் மற்ற பழங்களும் அவர்களுக்கு அளிக்கப்படும் உணவோடு கொடுக்கப் பட வேண்டும் என்று சிபாரிசு செய்யப் பட்டுள்ளது. வைட்டமின்-ஏ சத்து நமது கண்களின் ஆரோக்கியத்துக்கு மிகவும் அவசியமான சத்து ஆகும்.



அது மாம்பழத்தில் அதிக அளவில் இருக்கின்றது.

மாம்பழத்தில் அதிகமான அளவில் கலந்துள்ள கால்சியம் சத்தும், வைட்ட மின்-சி சத்தும், நமது பற்களுக்கும், ஈறுகளுக்கும், எலும்புகளின் வளர்ச் சிக்கும் மிகவும் அவசியமானதாகும். மாம்பழம் ஒரு சிறந்த சரும டானிக் ஆகும். சருமம் மற்றும் கூந்தலின் அழகையும் ஆரோக்கியத்தையும் பாது காக்கவும் மேம்படுத்தவும் விரும்புவோர் - தினமும் ஒரு மாம்பழம் சாப்பிட வேண்டும் என்று ஆலோசனை கூறப் படுகிறது. சர்க்கரையும் வறுக்கப்பட்ட உணவுகளும் நமது சருமத்தைப் பாதிக்கிறது. இனிய மாம்பழம் சருமத் தைப் பாதுகாக்கிறது.

உடல் எடையை அதிகரிக்க விரும்பு வோர் தினசரி ஒரு மாம்பழம் அல்லது இரண்டு மாம்பழங்களை தேன் மற்றும் தேங்காய்ப்பாலுடன் மாம்பழச்சாற் றைக் கலந்து சாப்பிட்டு வந்தாலும் உடல் எடை அதிகரிக்கும். உடல் எடையை அதிகரிப்பதற்கு மருந்துக் கடைகளில் விற்கப்படும் விலையுயர்ந்த டானிக்குகளைவிட மாம்பழச்சாறு சிறந்ததும் மலிவானதுமாகும்.

புளிப்பு மற்றும் கசப்பான உணவுப் பொருட்களைச் சாப்பிடக்கூடாது என்று சிலர் கூறுவார்கள். ஆனாலும், மாங் காய்களைச் சட்னியாகவும், கறியாகவும், ஊறுகாயாகவும் சாப்பிடுவதில் எந்த விதக் கெடுதலோ தீமையோ இல்லை. மாம்பழச் சாறுடன் மற்ற காய்கறி களைக் கலந்து சாலடாகச் சாப்பிடு வதும் நன்மை தரும். மாங்காய்களை மென்று சாப்பிடுவது பற்கள் மற்றும் ஈறுகளின் ஆரோக்கியத்துக்கு மிகவும் நல்லதாகும். ஆனால் துவர்ப்பான மாங்காய்களை அதிக அளவில் சாப்பிடுவது நல்லதல்ல.



பழரசம், ஜேம், ஜெல்லி போன் றவை தயாரிக்கவும் மாம்பழங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மாம்பழச் சாறுடன் முந்திரிப்பருப்பு, வெல்லம் போன்றவற்றைக் கலந்து பாயாசம் தயாரிக்கலாம். அது இனிமையாகவும் சுவையாகவும் இருக்கும். அத்துடன் தேங்காய்ப்பாலும் ஏலக்காயும் சேர்த்துக் கொண்டால் கமகமவென்று நறுமண முள்ளதாக இருக்கும். நோயாளிகளுக் கும், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், முதியோர்கள், பெரிய வர்கள் மற்றும் வளரும் குழந்தைகளுக் கும் இது ஒரு சிறந்த உணவாகும்.

மாம்பழம் மட்டுமல்ல - மாம்பழக் கொட்டைகள், மாவிலைகள், மாமரப் பட்டைகள் ஆகியவையும் மருத்துவத் தன்மை கொண்டவை ஆகும். மருந்துக் கடைகளில் விற்கப்படும் பற்பசை களைவிட மாவிலைகள் பல் வியாதி களுக்கு சிறந்த மருந்தாகும் என்று இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. காய்ந்த மாவிலைகளைப் பொடியாக்கி - அந்தப் பொடியைத் தீக்காயங்களில் தடவி வந்தால் - தீப்பட்ட காயங்கள் விரைவில் குணமாகும். மாமரத்தில் உண்டாகும் பிசின் அல்லது பசை - பூச்சிக் கடிகளுக்குச் சிறந்த மருந்தாகும். அது வலிகளைக் குறைக்கும். இரத்தம் வடிதல், மற்றும் புண்களுக்கு காய்ந்த மாமரப் பட்டை சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது.

மாம்பழக் கொட்டைகளைப் பொடி யாக்கி - அந்தப் பொடியை வயிற்றுப் போக்கு மற்றும் சீதபேதியுள்ளவர் களுக்குக் கொடுத்தால் வயிற்றுப் போக்கும், சீதபேதியும் உடனடியாக நிற்கும் - குணமாகும். இது விலை யுயர்ந்த கோகோ வெண்ணையைவிட சிறந்தது என்று ஹைதராபாத்திலுள்ள தேசிய சத்துணவு நிறுவனம் கண்டு பிடித்துள்ளது.

மாம்பழக் கொட்டைகளை வீணாக் கும் வகையில் வெளியில் எறிந்து விடக்கூடாது. இன்னொரு மாமரத்தை உண்டாக்கும் வகையில் அதை மண்ணில் நட்டு, தண்ணீர் பாய்ச்சி வளர்க்க வேண்டும், அல்லது பொடி யாக்கி மருந்தாகப் பயன்படுத்த வேண்டும்.

நன்றி: எழுமின் நலம்பெற



**வாழையின் மகிமை**

சிறுநீரகத்தில் கற்கள் இருந்தால் பப் பாளியும், வாழைத்தண்டும் மாற்றி மாற்றி உண்டு வந்தால் இந்நோய் குணமாகும்.

# வேலைவாய்ப்பு அலுவலகத்தில் விடுபட்டுப்போன பதிவைப் புதுப்பிக்க அரசாணை

**வாசகர்களே! வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, உங்கள் பதிவைப் புதுப்பிக்கத் தவறி விட்டீர்களா? கவலையை விடுங்கள். இதோ அதற்கான அரசாணை! இந்த அரசாணையை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நேரில் காட்டி நீங்கள் புதுப்பித்துக் கொள்ளலாம்.**

தமிழ்நாடு அரசு

-சுருக்கம்-

வேலைவாய்ப்பு அலுவலக நடைமுறைகள் - பதிவுகள் புதுப்பித்தல் - *1992, 1993, 1994* மற்றும் *1995* ஆண்டுகளில் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு, புதுப்பிக்கச் சலுகை வழங்குதல் ஆணை வெளியிடப்படுகிறது.

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ2) துறை**

அரசு ஆணை நிலை எண்.157 நாள் 28.10.1996-ல்

படிக்கப்பட்டது

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரின்
கடித எண். பப158305/96, நாள் 5.9.96 மற்றும் 19.9.96.

******

**ஆணை:**

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை தொடர்பான மானியக் கோரிக்கையின் மீது **20.8.1996**ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையில் நடந்த விவாதத்திற்குப் பதிலளிக்கையில், பல்வேறு காரணங்களினால் தங்களின் பதிவுகளை வேலைவாய்ப்பகங்களில் புதுப்பிக்கத் தவறியவர்களுக்குச் சலுகை அளிக்கும் நோக்கத்தில் அவர்கள் தற்போது புதுப்பிக்க அவகாசம் அளிக்கப்படும் என்று மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அறிவிப்புச் செய்தார். இது தொடர்பாக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையருடன் கலந்தாலோசிக்கப்பட்டது.

2. **1993, 1994** மற்றும் **1995**ஆம் ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தங்களின் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்குச் சில நிபந்தனைகளுடன் ஒரு முறை அவகாசம் அளித்து அவர்கள் தங்கள் பதிவுகளைப் புதுப்பிக்க வகை செய்யும் வகையில் ஆணைகள் வழங்கலாம் என்று வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் அரசுக்குப் பரிந்துரை செய்தார். இதனை அரசு நன்கு ஆராய்ந்து, **1989** முதல் **1992** வரையில் உள்ள காலத்தில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து, அவற்றை முறையாக **1992** முதல் **1995**ஆம்

ஆண்டுகளில் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு அவர்கள் தங்களின் பதிவுகளைப் புதுப்பிக்க ஒரு சிறப்பு அவகாசம் அளிக்கலாம் என்று அரசு முடிவு செய்தது. அதன்படி *1989, 1990, 1991* மற்றும் *1992* ஆகிய ஆண்டுகளில் வேலைவாய்ப்புக்கெனப் பதிவு செய்து, அதன் பின்பு, முறையே *1992, 1993, 1994* மற்றும் *1995*ஆம் ஆண்டுகளில் புதுப்பிக்கத் தவறியவர்கள் தற்போது தங்களின் பதிவுகளைக் கீழ்காணும் நிபந்தனைகளின் பேரில் அவற்றைப் புதுப்பித்து மறு பதிவு செய்யலாம் என்று அரசு ஆணை வெளியிடுகிறது.

(1) *1992, 1993, 1994* மற்றும் *1995* ஆகிய ஆண்டுகளில் புதுப்பிக்கத் தவறிய நபர்கள் மட்டும் இச்சலுகையைப் பெறலாம்.

(2) இச்சலுகையைப் பெற விரும்பும் நபர்கள் அரசாணை வெளியிடப்பட்ட 3 (மூன்று) மாதங்களுக்குள் சம்பந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு வேலைவாய்ப்புப் பதிவு அட்டையின் நகலுடன் மனுச் செய்யவேண்டும்.

(3) இச்சலுகை ஒரு முறை மட்டும் வழங்கப்படும்.

(4) 3 மாதங்களுக்குப் பின் செய்யப்படும் மனுக்கள் நிராகரிக்கப்படும்.

(5) *1992*ஆம் ஆண்டிற்கு முன் புதுப்பிக்கத் தவறியவர்களின் மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(6) தங்களுடைய வேலைவாய்ப்பு அட்டைகளையும் அதனுடன் சேர்த்து, அவை *1992*க்கு முன் முறையாகப் புதுப்பிக்கப்பட்டதற்கான அத்தாட்சியுடனும் மற்றும் உரிய கல்விச் சான்றுகளுடனும் மனுச் செய்யப்பட வேண்டும்.

(7) *1992, 1993, 1994* மற்றும் *1995*ஆம் ஆண்டுகளில் புதுப்பிக்கத் தவறியதன் பேரில், அதன் பிறகு புதிதாகப் பதிவு செய்தவர்களுக்கும் இச்சலுகை பொருந்தும், உதாரணமாக *1989*ஆம் ஆண்டு சனவரியில் பதிவு செய்தவர் *1992* சனவரியில் புதுப்பிக்கத் தவறியதால் அவர் புதிதாக *1993*ஆம் ஆண்டில் அல்லது அதன் பிறகு பதிவு செய்திருக்கக்கூடும். இதுபோன்ற நபர்களுக்கு இச்சலுகை வழங்கப்படுவதால் அவர்களுக்கு *1989*ஆம் ஆண்டிலிருந்து பதிவு மூப்புக் கிடைக்கும்.

(8). இச்சலுகை *1992, 1993, 1994* மற்றும் *1995*ஆம் ஆண்டுகளில் தங்கள் பதிவுகளை வேறு வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு மாற்றியவர்களுக்கும் பொருந்தும்.

(Those who have transferred their Registration to other employment exchanges and failed to renew them thereafter will also be covered. They should belong to *1992, 1993, 1994* and *1995.)*

3. மேலே பத்தி 2ல் வெளியிடப்பட்ட ஆணைகள் பற்றிய விவரங்களை, அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களில் உள்ள தகவல் பலகைகளில் (Notice Board) பொது மக்களின் தகவலுக்காக வைக்க, தக்க அறிவுரைகள் வழங்கும்படி வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி.)**

**தேபேந்திரநாத் சாரங்கி**
**அரசுச் செயலாளர்**

பழியுணர்வு மட்டுமே வாழ்க்கை எனக்
கொண்டவர்கள், பகைவர் முயற்சி
இல்லாமலே - தமக்குத் தாமே குழி வெட்டிக்
கொள்ளுவார்கள்!

**– கலைஞர்**

# அரசு உதவிகளைப் பெற யாரை அணுக வேண்டும்

## சமூக நலத்துறை

| திட்டத்தின் பெயர் | தகுதிகள் நிபந்தனைகள் | அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டம் | கைம்பெண், அனாதை, விதவை, கணவனால் கைவிடப்பட்டவர்கள் ஆண்டு வருமானம் ரூ.12000க்குக் குறைவாக இருக்கவேண்டும். வயது 20 - 40க்குள் இருக்கவேண்டும். தையற்கலை தெரிந்தவராக இருக்கவேண்டும். இலவசத் தையல் இயந்திரம் பெறாதவராக இருக்கவேண்டும். | மாவட்ட சமூக நல அலுவலர் சம்பந்தப்பட்ட மாவட்டம் |
| மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம். | மணப்பெண் 18 வயது நிரம்பியவராக இருக்கவேண்டும். 8ம் வகுப்புவரை படித்திருக்க வேண்டும். மணப்பெண்ணுக்கு முதல் திருமணமாக இருக்கவேண்டும். திருமணத்திற்கு 15 நாட்களுக்கு முன்னர் விண்ணப்பித்திருக்க வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.12000க்கு மேல் இருக்கக் கூடாது. கிராமப்புறமாக இருந்தால் ஊராட்சி ஒன்றிய ஆணையர் மூலமாகவும், நகராட்சிப் பகுதியில் வசிப்பவராக இருந்தால் நகராட்சி ஆணையர் மூலமும் விண்ணப்பிக்க வேண்டும். உதவித் தொகை ரூ.10,000 வழங்கப்படும். | ” |
| விதவை மகள் திருமணம் | மணமகளின் தாய் விதவையாக இருக்கவேண்டும். மறுமணம் செய்யாமலிருக்க வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.12000க்கு மிகாமல் இருக்க வேண்டும். ரொக்கத் தொகை ரூ.2000 வழங்கப்படும். மணப்பெண் 20 வயது நியம்பியவராக இருக்கவேண்டும். | ” |
| டாக்டர் தர்மாம்பாள் விதவை மறுமண ஊக்குவிப்புத் திட்டம் | மணப்பெண் விதவையாக இருக்கவேண்டும். வயது 20 முதல் 30க்குள் இருக்கவேண்டும். மணமகள் அரசின் எந்த சலுகைகளையும் பெறாதவராக இருக்கவேண்டும். மணமக்களுக்கு ரூ.5000 தேசிய சேமிப்புப் பத்திரமாக வழங்கப்படும். மணமகனுக்கு 40 வயதுக்கு மேல் இருக்கக்கூடாது. முதலில் திருமணம் ஆகியிந்தால் மனைவி உயிருடன் இருக்கக் கூடாது. ஆண்டு வருமானம் ரூ.12000க்கு மிகாமல் இருக்கவேண்டும். | ” |
| ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டம் | மணமகள் அனாதையாக இருக்கவேண்டும். ஆண்டு வருமானம் ரூ.12000க்கு மிகாமல் இருக்கவேண்டும். வயது வரம்பு 20க்கு மேல் இருக்கவேண்டும். குடும்பத்தில் ஒரு நபர் மட்டும் இவ்வுதவி பெற முடியும். ரொக்கப் பணம் ரூ.2000 வழங்கப்படும். | ” |
| தமிழ்நாடு அரசு கலப்புத் திருமண உதவித் திட்டம் | 20 வயதுக்குமேல் இருக்கவேண்டும். ஆண்டு வருமானம் ரூ.12000க்கு மிகாமல் இருக்கவேண்டும். தாழ்த்தப்பட்டவர் பிற்பட்டோரை மணக்க வேண்டும். பிற்பட்டோர் தாழ்த்தப்பட்டோரை மணக்கவேண்டும். முற்பட்டோர் பிற்பட்டோரை மணக்கவேண்டும். | ” |

| | | |
|---|---|---|
| | முற்பட்டோர் தாழ்த்தப்பட்டோரை மணக்கவேண்டும்.<br><br>பதிவுத் திருமணமாக இருக்கவேண்டும். திருமணம் நடைபெற்ற இரண்டு ஆண்டுகளுக்குள் விண்ணப்பிக்க வேண்டும். உதவித்தொகை ரூ.2000க்கு தேசிய சேமிப்புப் பத்திரமும், ரூ.3000 ரொக்கமாகவும் அளிக்கப்படும். | மாவட்ட சமூகநல அலுவலர் சம்பந்தப்பட்ட மாவட்டம். |
| ஏழைப் பெண்களுக்குத் தொழில் சார்ந்த பயிற்சித் திட்டம் | பள்ளி இறுதியாண்டில் 50 தேர்ச்சி மற்றும் அதற்கு மேல் பெற்றிருக்க வேண்டும்.<br>வயது வரம்பு 16 - 30 வரை. ஆண்டு வருமானம் ரூ.6400க்குக் குறைவாக இருக்கவேண்டும்.<br>தட்டெழுத்திற்கு மாதம் ரூ.15ம், சுருக்கெழுத்திற்கு ரூ.10ம் அளிக்கப்படுகிறது. | ” |
| விதவையின் குழந்தைகளுக்கு இலவசமாக பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப்புத்தகங்கள் வழங்குதல். | விதவையின் குழந்தையாக இருக்கவேண்டும். ஆண்டு வருமானம் ரூ.12000க்கு மிகாமல் இருக்கவேண்டும். 1 முதல் 8ஆம் வகுப்பு வரை நோட்டுப் புத்தகங்கள் அளிக்கப்படும்.<br>9ஆம் வகுப்பு முதல் +2 வரை பாடப்புத்தகங்கள் மற்றும் நோட்டுப்புத்தகங்கள் அளிக்கப்படுகிறது. | ” |
| தையற் பயிற்சி மையம் | வயது 18 முதல் 30க்குள் இருக்கவேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12000க்கு மிகாமல் இருக்கவேண்டும். சமூகநலத் துறையின் நிதி உதவியுடன் செயல்படுகின்ற தையற் பயிற்சி பயிலும் மகளிருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.50 உதவித்தொகையும், ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை பிற்பட்டோர் நலத்துறை ஆகிய துறைகளின் நிதி உதவியுடன் செயல்படுகின்ற தையல் பயிற்சி மையங்களில் பயிலும் மாணவிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.30 உதவித்தொகையும் வழங்கப்படுகிறது. | ” |
| டாக்டர் முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு உதவித் திட்டம் | கர்ப்பிணிகளுக்கு ரூ.500 உதவித்தொகை வழங்கப்படுகிறது. கர்ப்பிணிகள் மருத்துவமனையில் பெயர் பதிவு செய்திருக்க வேண்டும். அருகிலுள்ள மகப்பேறு உதவியாளரின் சான்று பெற வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.12000க்குள் இருக்கவேண்டும். முதல் இரண்டு குழந்தைகளுக்கு இவ்வுதவித் தொகை வழங்கப்படும். 20 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். | ஊராட்சி ஒன்றிய ஆணையர் / நகராட்சி ஆணையர் சம்பந்தப்பட்ட ஒன்றியம் / நகராட்சி |
| அரசு குழந்தைகள் பராமரிப்பு இல்லம் | 5 வயது முதல் 18 வயது வரை பெண்களும் அதாவது முதல் வகுப்பு முதல் +2 வரை 5 வயது முதல் 10 வயது வரை ஆண்களும் (முதல் வகுப்பு முதல் 5 வகுப்பு வரை) தாயோ, தந்தையோ யாராவது ஒருவரை இழந்த அல்லது பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகள் இல்லத்தில் சேர்க்கப்பட்டு இடம், உடை, உணவு இலவசமாக அளிக்கப்படுகிறது. பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.12000க்கு மிகாமல் இருக்க வேண்டும். | மாவட்ட சமூக நல அலுவலர் சம்பந்தப்பட்ட மாவட்டம் |
| தமிழக அரசு பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் | இந்தத் திட்டத்தில் சேர விரும்பும் பெற்றோர் தாய் அல்லது தந்தை 40 வயதிற்குள் 1.4.92க்குப் பின்னர் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருக்க வேண்டும். | ” |

அந்தப் பெற்றோருக்கு ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் இருக்கவேண்டும். ஆண் குழந்தை இருக்கக் கூடாது.

இந்தத் திட்டத்தில் பதிவு செய்யப்படும் பெண் குழந்தை 3 வயதிற்குட்பட்டதாக இருக்கவேண்டும்.

அந்தக் குடும்பம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருக்கவேண்டும். ஆண்டுக்கு வருமானம் ரூ.12000க்கு மிகாமல் இருக்கக் கூடாது.

## பயன்கள்

ஒரு பெண் குழந்தைக்கு 5000 ரூபாய் வைப்புநிதியாக அந்தக் குழந்தையின் பெயரால் அரசு முதலீடு செய்யும்.

குழந்தையின் முதல் பிறந்த நாளில் அந்தக் குழந்தைக்கு ரூ.800 மதிப்புக்கு உரிய தங்க மோதிரம் வழங்கப்படும்.

குழந்தையைப் பள்ளியில் முதல் வகுப்பில் சேர்க்கும்போது ரூ.250 கிடைக்கும். குழந்தை 6ஆம் வகுப்பிற்குச் செல்லும்போது ரூ.500 வழங்கப்படும்.

9ஆம் வகுப்பு முதல் பிளஸ் 2 வகுப்பு படிக்கும் 4 ஆண்டு காலத்தில் 40 மாதங்களுக்கு மாதம் ரூ.50 வீதம் மாதாமாதம் வழங்கப்படும்.

அந்தப் பெண் குழந்தை 20 வயது முடிந்த உடன் திருமணச் செலவிற்கோ அல்லது மேற்படிப்புக்கோ ரூ.20,000 வழங்கப்படும்.

## அட்டைப்பட விளக்கம்

**முதலாம் அட்டை:**

காவல்துறைப் போக்குவரத்துப் பிரிவினருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நவீன கருவிகளை வழங்கினார்.

**இரண்டாம் அட்டை:**

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 19.11.96 அன்று தலைமைச் செயலகத்தில் தேசிய ஒருமைப்பாடு உறுதி மொழியினை படிக்க மாண்புமிகு அமைச்சர்களும், அலுவலர் களும் உறுதிமொழி ஏற்கின்றனர்.

**நான்காம் அட்டை:**

உணவுப் பாதுகாப்புக் கண்காட்சி விழாவினை மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு தேவகவுடா அவர்கள் 9.11.96 அன்று துவக்கிவைத்தார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : என்.எஸ். பழனியப்பன் இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
துணை இயக்குநர் : இரா.பா. கார்மேகம், உதவி இயக்குநர் : எம். அண்ணாமலை
ஆசிரியர் குழு : ஜி. லோகநாதன், எம்.வி.எம். அசோகன், அ. மதிமாறன், பி.எல். ராஜேந்திரன், ஜி. பாஸ்கரன், எஸ். ஜெயலலிதா
ஓவியர்கள் : என். குமாரசாமி, சி. ஜெயச்சந்திரன், பி. குமார், தி. சம்பத், தி. மகேஸ்வரி
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002. தொலைபேசி எண் : 568926, 568927



சென்னை, ராஜ்பவனில் 24.11.96 அன்று மேதகு இந்தியக் குடியரசு துணைத் தலைவர் திரு கே.ஆர். நாராயணன் அவர்களை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சந்தித்தார்.

# புகைப்பழக்கம் கண்களைக் குருடாக்கிவிடும்

புகைப்பிடிப்பதால் புற்றுநோய், இதய நோய்கள், வாய்துர்நாற்றம் போன்றவை உண்டாகும் என்றுதான் இதுவரை மருத்துவ ஆராய்ச்சிகள் கூறிவந்தன. தற்போது இந்தப் பழக்கம், புகைப்பிடிப்பவரின் கண்களைக் குருடாக்கிவிடும் என்று அமெரிக்க மருத்துவக்கழகம் கண்டுபிடித்து தெரிவித்துள்ளது.

அண்மையில், அமெரிக்காவில் நாள் ஒன்றுக்கு 25 சிகரெட் பிடிக்கும் பழக்கம் உடைய 32 ஆயிரம் பெண் செவிலியர் களிடையே 12 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து ஒரு கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதன்படி புகைப்பிடிப்பவர்களுக்கு, புகைப் பிடிக்காதவர்களைவிட இரண்டரை மடங்கு அளவுக்குக் கூடுதலாகக் கண்கள் குருடாகும் வாய்ப்புள்ளது. ஆண்களில் நாள் ஒன்றுக்கு 25 சிகரெட் குடிக்கும் 21 ஆயிரம் ஆண்களிடையே சோதனை நடத்தியபோது இரண்டிலிருந்து மூன்று பங்கு வரை குருடாகும் சூழ்நிலை உருவாகியிருந்தது. ஆனால், எவ்வளவு சிகரெட் பிடித்தால், கண்கள் குருடாகும் என்று சரியாகச் சொல்லமுடியாவிட்டாலும், புகைப்பழக்கம் கண்களைக் குருடாக்கிவிடும் என்று மட்டும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

# பாவம் பசுந்தளிர்கள்!



**உலக நாடுகள் பலவற்றிலும் போராளி அமைப்புகள் மட்டுமல்ல; அரசாங்கங்களும் பிஞ்சுக் குழந்தைகளின் கரங்களில் துப்பாக்கிகளைக் கொடுத்து - இரத்த நாற்றத்தை நுகரச் செய்கின்றன என்று குற்றம் சாட்டுகிறது ஐ.நா.சபை அறிக்கை!**

நவம்பர் மாதத்திற்குப் பெருமை சேர்த்த உலகத் தலைவர்களில் ஒருவர் பண்டித ஜவகர்லால் நேரு. இந்திய சுதந்திர போராட்டக் கால சரித்திரத்தில் அண்ணல் காந்தி அடிகளுக்கு அடுத்த இடத்திலும், சுதந்திர இந்தியாவை உருவாக்குவதில் முதலிடத்திலும் சரித்திரத்தில் இடம்பிடித்த நாயகர்! அவருக்குப் பிடித்தமான பொருட்கள் இரண்டு. ஒன்று ரோஜா மலர்கள். அது எப்போதும் அவருடைய அங்கியை அலங்கரிக்கும். சுருட்டு இல்லாத சர்ச்சிலையும், ரோஜா இல்லாத நேருவையும் எந்தப் படத்திலும் பார்த்திருக்க முடியாது! மற்றொன்று – மலரினும் மெல்லிய மழலைகள். அதனால் தான் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 14ஆம் நாள் நேருவினுடைய பிறந்தநாளை நாடு முழுவதும் நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இந்த ஆண்டு நாடு முழுவதும் குழந்தைகள் தினவிழா கொண்டாடப்பட்டு, நேரு பிரானின் நினைவுக்கு அஞ்சலி செலுத்தப் பட்டது. இதே நேரத்தில்தான் ஐ.நா. சபை வெளியிட்ட ஒரு அறிக்கை நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. குழந்தைகள் தினவிழாவுக்குச் சில நாட்கள் முன்பாக ஐ.நா. சபை வெளியிட்ட அந்த அறிக்கையில் "குழந்தைகள் தங்கள் இளமையை அனுபவிக்க அனுமதியுங்கள்" என்று உலக நாடுகளுக்கு வேண்டுகோளும் விடுக்கப்பட்டது.

ஒவ்வொருவரும் தங்கள் குழந்தைகளை நேசிக்கவே செய்கிறார்கள். எத்தனைப் பேர் மற்றவர்களின் குழந்தைகளை நேசிக்கிறார்கள் என்று பார்க்கிற போதுதான் மனிதாபிமானம் சகாரா பாலைவனத்தைவிட கொடுமையான வெப்பத்தோடு இருப்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

சொந்தக் குழந்தைகளைக் கொஞ்சி மகிழுகிற அந்த இதயங்களில் அடுத்தவர் குழந்தைகள் படுகிற அவதிகளைக் கண்டு அழுகிற அளவுக்கு இரக்கம் இல்லாவிட்டாலும் அதைக் கண்டு ஆனந்திக்கிற கொடூரமாவது இல்லாமல் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் - என்ற சிந்தனைதான் ஐ.நா. சபையின் அறிக்கையைப் படிக்கிறபோது ஒவ்வொருவர் இதயத்திலும் ஏற்படும்.

ஐ.நா. சபையின் மனித உரிமைக்கான மையம், அதன் குழந்தைகள் உதவி நிறுவனமான "யூனிசெஃப்" ஆகியவற்றின் ஆதரவோடு அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

### பாலகர்களின் பரிதாப நிலை

அந்த அறிக்கையைத் தயாரித்தவர் மொசாம்பிக் நாட்டின் முன்னாள் அதிபர் மறைந்த சமோரா மேச்சலின் மனைவி கிரேகா மேச்சல். "குழந்தைகள் மீது யுத்தத்தின் விளைவுகள்" என்ற பொருள் குறித்த ஐ.நா. சபையின் ஆய்வுத் திட்டத்திற்காக அவர் எதியோப்பியா, உகாண்டா,



ஈராக், கம்போடியா, அங்கோலா, கொலம்பியா, லெபனான், ரூவாண்டா, முன்னாள் யூகோஸ்லாவியாவில் அடங்கிய நாடுகள் என்று நீண்ட தூரம் பயணம் செய்து ஆய்வு நடத்தி தனது அறிக்கையைத் தயாரித்துள்ளார்.

தனது அறிக்கையில் ஐ.நா. சபையிடம் தாக்கல் செய்துள்ள கிரேகா மேச்சல் கூறியிருப்பதாவது:

"கொலம்பியாவிலிருந்து கெப்ரோ வரை மோதல்களிலும், யுத்தங்களிலும் மேலும் மேலும் குழந்தைகள் கொல்லப்பட்டு வருகின்றனர்."

குழந்தைகள் தங்கள் இளமையை அனுபவிக்க அனுமதியுங்கள். நான் குரல் அற்றவர்களுக்காகக் குரல் கொடுப்பதற்காக இங்கே வந்திருக்கிறேன். உங்கள் பார்வையைத் திருப்பிக் கொள்ளாதீர்கள்! குழந்தைகள் என்ற முறையில் அவர்களுக்கு இருக்கக்கூடிய ஆசைகளையும் விருப்பங்களையும் உணர்ந்து கொள்ளுங்கள்.

இன்று அப்பாவி மக்கள்தான் யுத்தக்களங்களில் முதல் வரிசையில் நிறுத்தப்படுகின்றனர். அந்தப் பொதுமக்கள்தான் யுத்தத்தைச் சந்திக்கின்றனர். யுத்தங்களில் கொல்லப்படுபவர்களில் 90 சதவிகிதம் பேர் அப்பாவிப் பொதுமக்கள்தான். அவர்களில் பாதிப் பேர் பிஞ்சுக் குழந்தைகள்."

இவ்வாறு கூறியுள்ள கிரேகா மேச்சல், தனது அறிக்கையில் என்ன கூறியிருக்கிறார் என்று தெரிந்துகொள்ளுவோம். கடந்த வாரம் வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள பல தகவல்கள் நம்மை அதிர்ச்சி அடைய வைக்கின்றன. அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ள முக்கியக் கருத்துக்கள் வருமாறு:

கடந்த 10 ஆண்டுகளாக உலகம் முழுவதும் நடைபெற்று வரும் மோதல்கள் அல்லது யுத்தங்களில் சுமார் 20 இலட்சம் குழந்தைகள் இறந்துள்ளனர். இதேபோல 3 பங்கு குழந்தைகள் படுகாயமடைந்துள்ளனர்.

யுத்தங்களில் குழந்தைகள் அனுபவிக்கும் துன்பங்கள் பல வகையானவை.

சிறிய மற்றும் அதிக நுணுக்கமில்லாத ஆயுதங்களைக் கையாளுதல்.



கண்ணிவெடிகளில் சிக்கி - அல்லது கடுமையான காயத்தை அடைகின்றனர்.

அகதிகள் முகாம்கள் அவசரமாக அமைக்கப்பட்டு அவற்றில் வசிக்கநேரும் வேளையில் மருத்துவப் பிரச்சினைகளைச் சந்திக்கின்றனர்.

இவை, குழந்தைகள் அனுபவிக்கும் முக்கியமான கொடுமைகள். இவற்றைக் கூறியுள்ள கிரேகா மேச்சலின் அறிக்கையில்- அத்தகைய நிலையை எப்படி மாற்றலாம்? அதற்கு எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**தண்டிக்கப்பட வேண்டும்**

18 வயதுக்குட்பட்ட குழந்தைகளை அரசாங்கமோ, போராளி அமைப்போ தங்கள் இராணுவத்தில் சேர்க்கக்கூடாது.

உலகம் முழுவதும் கண்ணிவெடிகளைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்க வேண்டும்.

யாரேனும்- பொதுமக்களானாலும் இராணுவ வீரர் என்றாலும், பெண்களைக் கற்பழிப்பதை ஒரு ஆயுதமாக அல்லது யுத்த நடவடிக்கையாகப் பயன்படுத்தினால் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு உலக யுத்தக் களத்தில் குழந்தைகளுக்கு எதிராக நடத்தப்பட்டு வரும் கொடுமைகளை ஒட்டுமொத்தமாகக் கூறியதோடு மட்டும் நிறுத்திவிடாமல் ஒவ்வொரு நாட்டிலும் எந்தெந்த வகைகளில் குழந்தைகள் பாதிக்கப்பட்டனர் என்பதையும் அவர் விளக்கியுள்ளார்.

உதாரணமாக 1980ஆம் ஆண்டுகளில் எதியோப்பிய நாட்டில் ஆயுதம் தாங்கிய தீவிரவாதிகள் சாலைகளில் அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தனர். குழந்தைகள் உட்பட அவர்களுடைய கண்களில் பட்டவர்களையெல்லாம் இழுத்துச் சென்று இராணுவ சேவையில் ஈடுபடுத்தினர்.

ஆப்கானிஸ்தானில் உள்ள போர் வீரர்களில் 45 சதவிகிதம் பேர் குழந்தைகள். அதாவது சிறுவர்கள். தற்போது ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றியுள்ள புதிய இராணுவக் குழுவின் பெயர் தாலிபான். தாலிபான் என்பதற்கு மாணவன் என்பது பொருள். அதிலிருந்தே அதில் சிறுவர்களின் பங்கு அதிகம் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

இவர்கள் குழந்தைகளை - சிறுவர்களை இராணுவத்தில் சேர்ப்பதற்குக் காரணம் என்ன? அவர்கள்தான் எதிர்த்துப் பேச மாட்டார்கள். கட்டளைக்குக் கீழ்ப் படிவார்கள். குடும்பம் இல்லாமல் தனியாக இருக்கும் ஒரு குழந்தைக்கு உணவு போன்ற அத்தியாவசியத் தேவைகளைக் கொடுத்து, பாதுகாப்பு உள்ளது என்ற உணர்வையும் ஏற்படுத்தும் போது அவன் தன்னைத் தனிமைப்படுத்திய தனது குடும்பத்தைக் கொடுமைப்படுத்திய சக்திகளை எதிர்த்துப் போராடுகின்ற பழிவாங்கும் உணர்வோடு தீவிரமான உணர்வைப் பெறுகிறான். பொதுவாகத் தீவிரவாத குழுக்களில் சிறுவர்கள் அதிக அளவில் ஈடுபடுவதற்கு இதுவும் ஒரு காரணம். அரசு இராணுவம் அத்துமீறிய செயல்களில் ஈடுபடும்போது அதனால் பாதிக்கப்படும் குழந்தை, இயற்கையாகவே பழிவாங்கும் உணர்வைப் பெறுவதும் இத்தகைய நிலைமைக்குக் காரணமாகிறது.

### சிறுமிகள் நிலை

சிறுவர்கள் மட்டுமல்ல; சிறுமிகளும் கூட இராணுவத்தில் சேர்க்கப்படுகிறார்கள். ஒரிரு குழுக்களில் அல்லது இராணுவத்தில் மட்டுமே அவர்கள் கௌரவமான முறையில் போர் வீராங்கனைகளாகத் துப்பாக்கி ஏந்தி யுத்தக் களத்தில் ஈடுபடுபவர்களாக மாற்றப்படுகின்றனர். மற்ற பகுதிகளில் அவர்கள் சமையல் செய்பவர்களாக, செவிலியர்களாகச் சில வேளைகளில் விபச்சாரிகளாகக் கூட பயன்படுத்தப்படுகின்றனர் என்கிறது ஐ.நா. சபைக்காகத் தயாரிக்கப்பட்ட அறிக்கை.

இரண்டாவது உலகப் போரின் போது தாய்லாந்து உட்படப் பல்வேறு நாட்டுப் பெண்களை ஜப்பானிய இராணுவம் சிறைப்படுத்தி 'ஆறுதல் அளிக்கும் பெண்கள்' என்ற கௌரவமான பெயரின்கீழ் இராணுவ வீரர்களை மகிழ்விக்கும் விபச்சாரிகளாகப் பயன்படுத்தியது; அவர்களில் பலர் இறந்துவிட்டனர்! மீதமுள்ளவர்கள் தங்களுக்கு ஜப்பான் அரசு நஷ்டஈடு அளிக்க வேண்டும் என்று பிரச்சினை எழுப்பினர். அது இப்போது சர்வதேசப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. கடந்த காலத் தவறுக்காக ஜப்பான் அரசு வருத்தம் தெரிவித்து நஷ்டஈடு வழங்கவும் முன்வந்துள்ளது.

கடந்த காலங்களில் புதிய புதிய நவீன ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால் எளிதான ஆயுதங்களைச் சிறுவர்களால் கையாள முடிகிறது. அடுத்து அவர்கள் பயன்படுத்தப்படும் மற்றொரு பணி கண்ணிவெடிகளைப் பதிப்பதாகும்.

### வெடி விளையாட்டு

கிரேகா மேச்சலின் அறிக்கைப்படி உலகம் முழுவதும் 11 கோடி கண்ணிவெடிகள் பதிக்கப்பட்டு உள்ளன என்று மதிப்பிடப்பட்டுள்ளன. அவற்றைத் தவறுதலாக மிதிப்பதன்மூலம் பலியாகிறவர்களுள் குழந்தைகள்தான் அதிகம். அவர்கள் கண்ணிவெடிகளைப் பயன்படுத்தி விளையாடவும் செய்கின்றனர்.

வடக்கு ஈராக்கில், குழந்தைகள் தங்கள் பொம்மை வண்டிகளுக்குச் சக்கரங்களாகக் கண்ணிவெடிகளைப் பயன்படுத்துகின்றனர். கம்போடியாவில் குழந்தைகள் பி40 ரக கண்ணிவெடிகளைப் பந்துகளைப் போல வீசி விளையாடுகின்றனர் என்று திருமதி மேச்சலின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த யுத்தக் களங்களில் நடைபெறும் மற்றொரு கொடூரத்தையும் அவர் மறக்காமல் குறிப்பிட்டுள்ளார். அதுதான் கற்பழிப்பு. இதுபோன்ற கற்பழிப்புகள் தாயை மட்டுமல்ல; பிற்காலத்தில் பிறக்கும் குழந்தைகளின் எதிர்காலத்தையும் பாதிக்கும் கொடூரச் செயலாகும். சாதாரண குடிமகனோ, இராணுவ வீரனோ யுத்தத்தில் கற்பழிப்பை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துவதை ஒரு யுத்தக் குற்றமாகக் கருதி முறையாக வழக்குத் தொடர வேண்டும் என்று அவர் கூறி உள்ளார். எல்லா நாட்டு இராணுவங்களின்மீதும் இத்தகைய குற்றச்சாட்டுகள் கூறப்பட்டுள்ளன. அவை வெறும் குற்றச்சாட்டுகள் மட்டுமல்ல; உண்மைதான் என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளன. பல்வேறு நாட்டு அரசுகளின் இராணுவத் தலைமைகளும் நடவடிக்கைகள் மேற்கொண்டு தண்டனைகள் வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டபோதிலும் அத்தகைய தண்டனைகள் போதுமானவையல்ல. உண்மையான சம்பவங்களில் பெரும்பாலானவை வெளிவருவதும் இல்லை.

யுத்தத்தில் பாதிக்கப்படும் குழந்தைகளின் மறுவாழ்வுப் பணிகளில் 'யூனிசெப்' நிறுவனமே ஈடுபட வேண்டும் என்பது கிரேகா மேச்சலின் கருத்து.

ஐ.நா. சபை உலகக் குழந்தைகளைக் காப்பாற்றுவதற்கு என்ன செய்யப்போகிறது என்பதை அறிந்துகொள்ள உலகமே ஆவலுடன் காத்திருக்கிறது.

நாளைய உலகை - நமது சந்ததியை - உலகக் குழந்தைகளைக் காப்பாற்ற உலக அமைப்பு என்ன செய்யப்போகிறது? நாம் ஒவ்வொருவரும் என்ன செய்யப் போகிறோம்? இந்தக் கேள்விகளுக்கான விடையைப் பொறுத்தே நமது மனிதத் தன்மையை நாளைய சரித்திரம் எடைபோடும் என்பது மட்டும் நிச்சயம்!

**(நன்றி: முரசொலி 17.11.96-புதையல்)**

# வேலைவாய்ப்புச் செய்திகள்

ஜலந்தர் தொலைக்காட்சி நிலைய இயக்குநரிடமிருந்து ஒளிப்பதிவாளர் (Cameraman Grade III) பதவிக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. பதவி : ஒளிப்பதிவாளர் (Cameraman Grade III)

2. காலியிடங்கள்: : 8 (எட்டு)
(தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/பழங்குடியினர்...2, பிற்பட்ட வகுப்பினர்...2, முன்னாள் இராணுவத்தினர்...1, பொது...3)

3. சம்பளம் : ரூ.1600-50-2300-2660

4. வயது வரம்பு : 18 முதல் 30 வயது வரை
(தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 5 ஆண்டுகளும், பிற்பட்ட வகுப்பினருக்கு 3 ஆண்டுகளும், அரசு ஊழியர்களுக்கு 5 ஆண்டுகளும் மத்திய அரசின் வயது வரம்பு சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு சலுகைகள் அளிக்கப்படும்.)

5. கல்வி மற்றும் தகுதிகள் : (அ) பிளஸ் 2 தேர்ச்சி அல்லது அதற்குச் சமமான தேர்வில் அறிவியல் பிரிவில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) திரைப்பட (16 எம்எம் 35 எம்எம்) ஒளிப்பதிவாளர் பதவியில் குறைந்தது 3 ஆண்டுகள் அனுபவம் அல்லது ஏதாவது ஒரு திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்தில் 'யு' மேடிக் புகைப்படக் கருவியை இயக்கிய அனுபவம் அல்லது ஏதாவது ஒரு வீடியோ ஸ்டுடியோவில் 3 ஆண்டுகள் முன் அனுபவம் அல்லது தனியாக அல்லது பத்திரிகை நிறுவனங்களில் புகைப்படக்காரர் (Still Photograher) ஆக 3 ஆண்டுகள் அனுபவம் இருக்க வேண்டும்.

6. விண்ணப்பம் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 16.12.1996.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகள் அனைத்தும் பெற்றிருக்கும், விண்ணப்பதாரர்களுக்கு, புகைப்படக் கருவித் தேர்வும், மற்றும் நேர்காணல் தேர்வும் நடத்தப்பட்டு பணியில் அமர்த்தப்படுவார்கள். இத்தேர்வுகளுக்கு ஜலந்தர் செல்ல தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் விண்ணப்பதாரர்களுக்கு விதிகளின்படி பயணப்படி வழங்கப்படும். மற்றவர்களுக்குக் கிடையாது.

விண்ணப்பப் படிவங்கள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வெள்ளைத்தாளில் தட்டச்சு செய்து 16.12.1996க்குள் The Director, Doordarshan Kendra, Bhagwan Mahavir Marg, Jalandhar-144 001 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

சாதி மற்றும் வயது சான்றிதழ்களின் நகல்கள் அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரிடம் சான்றொப்பம் பெற்று அனுப்பி வைக்கவேண்டும்.

நன்றி: எம்ப்ளாய்மெண்ட் நியூஸ்
(நவம்பர் 16-22)

மாதிரி விண்ணப்பப் படிவம்

PROFORMA

# APPLICATION FOR THE POST OF CAMERAMAN GRADE - III

In Doordarshan Kendra, Jalandhar

Affix recent Passport size photograph here

1. Name (in Block Letters) :
2. Date of Birth (Attach attested photocopy of Matriculation Certificate for proof of age:
3. Age as on 16.12.1996 : .........Years........Months.........Days
4. Father's/Husband's Name :
5. Postal Address :
6. Permanent Address :
7. Whether Departmental Candidate if so State category of post and office where he/she is employed :
8. Educational & Professional qualifications, experience etc. (Attach attested photo copies of certificates) :
9. Wheter SC/ST/OBC, if so, state name of caste Sub caste (Attach attested photo copies of certificates) :
10. Details of present employment if any with supporting documents. (Attested photo copies should be furnished) :
11. Language known : (i) Read (ii) Write (iii) Speak
12. Mother Tongue :
13. Particulars of relatives, if any working in AIR/Doordarshan or in any other office under the Ministry of Information and Broadcasting :
14. Whether physically Handicapped (Yes/No.) If yes, attach attested photo copy of certificate.
15. Whether Ex-serviceman (Yes/No.)

    If yes, attach attested photo copy of Certificate.
16. Whether registered with any Employment Exchange if so, indicate Registration, Number with name of Employment Exchange.
17. Any additional information.

Certified that the particulars/information mentioned in the proforma, is correct to the best of my knowledge and belief and that in the event of suppressing the relevant information, my candidature is liable to be cancelled.

**Signature of the Candidate**
**Name in full:**
**( in block letters)**

**Place:**
**Date:**

# ஆசிரியர் மடல்

‘‘படிப்புக்கும் அறிவுக்கும் சம்பந்தமில்லை’’ அதனால்தான் திருவள்ளுவரே கல்வி என்றும், அறிவுடைமை என்றும் தனித்தனி அதிகாரம் எழுதியிருக்கிறார்’’ என்று பட்டிமண்டபங்களில் வாதாடுவார்கள். அண்மையில், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே, சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், திரு பொன்னுசாமி அவர்களின் மகனுக்கு ஏற்பட்ட கொடூரமான சாவைப் பார்க்கிற போது, அது சரிதானோ என்று எண்ணத் தோன்றுகிறது. ‘கற்றனைத்தூறும் அறிவு’ என்பது சில சமயம் இப்படிப் பொய்யாகிவிடுகிறது!

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அதற்கு மனமுருகிக் கண்டனம் தெரிவித்திருக்கிறார். ‘ராகிங்’ செய்யும் மாணாக்கர்கள் கல்வி நிறுவனத்திலிருந்தே நீக்கப்படுவர்’ என்றும் கடுமையாக எச்சரித்து இருக்கிறார்.

அந்தப் பல்கலைக்கழகப் பேராசிரியர் இருவரே ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன் காணாமல் போய் விட்டதாகவும், இதுவரை அவர்களைப் பற்றிய தகவல் இல்லை என்றும் ஒரு செய்தி வந்திருக்கிறது! இதெல்லாம் ஒரு கல்வியமைப்பின் நிர்வாகிகள் எத்தனை விழிப்போடிருக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டும் நிகழ்ச்சிகள் ஆகும்.

வீட்டிலிருந்து படிக்கச் செல்பவர்களானாலும், விடுதியில் தங்கிப் படிப்பவர்களானாலும் மாணவச் செல்வங்களைப் பெற்றோர்களும் கண்காணிக்கவும் வழிநடத்தவும் வேண்டும் என்பது மிக முக்கியம்.

புதிய மாணவர்களுக்கு, முதிய மாணவர்கள் படிப்பதிலும், நடப்பதிலும் வழிகாட்டியாக இருந்தால் என்ன? அதைவிடுத்து, ‘ராகிங்’ என்ற பெயரால் இவ்வாறான அநியாயங்களை அரங்கேற்றுவது அறிவுடைமையாகுமா? எந்தச் சமுதாயமாவது இதை ஏற்குமா?


தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23




